விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

பக்கங்கள்: பதின்நான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 03 செவ்வாய்க்கிழமை (20.10.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 305

## யாழ்.அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் 11 அமைச்சர்கள் கொண்ட குழு நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்திப் பணிகளுக்கென சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் 11 அமைச்சர்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

இவ் அமைச்சர்கள் குழு யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலக பிரிவுகளிலும் உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்துதல், அபிவிருத்திப்பணிகளை முன்னெடுத்தல் போன்ற நடவடிக்கைகளை பிரதேச செயலர்களுடன் இணைந்து மேற்கொள்வர்.

இது தொடர்பான மாநாடு நேற்றுக் காலை 10 மணிக்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இம் மாநாட்டில் மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, பிரதி சுகாதார அமைச்சர் வடிவேல் சுரேஸ், அமைச்சர் பிரேம்லால் ஜெயசேகர, அமைச்சர் குஷைன்பைலா, அமைச்சர் மகிந்த (13ஆம் பக்கம் பார்க்க)

## கம்பஹாவில் நேற்று தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பின் புறநகர்ப் பகுதியான கம்பஹாவில் நேற்றுக் காலை பொலிஸார் நடத்தய தேடுதலில் ஆறு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் தமிழ் இளைஞர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். விடுதிகளிலும் சோதனை கள் இடம்பெற்றன.

இதன்போது ஆள் அடையாளங்களைக் காண்பிக்கத் தவறிய இளைஞர்கள் ஆறு பேர் கைது செய்யப் (14ஆம் பக்கம் பார்க்க)

# ஜி.எஸ்.பி+ வரிச் சலுகையை இலங்கை இழந்து விட்டது!

## ஐரோ. ஒன்றிய அறிக்கையில் தெரிவிப்பு

(பிரசல்ஸ்)

மனித உரிமை மீறல் செயற்பாடுகள் காரணமாக ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை பெறுவதற்கான தகுதியை இலங்கை இழந்து விட்டதாக ஐரோப்பிய ஒன்றிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தொடர்ந்து வர்த்தக சலுகைகளை வழங்குவதா அல்லது தற்காலிகமாக நிறுத்திவைப்பதா என்பது குறித்து உறுப்பு நாடுகளுடன் ஐரோப்பிய ஆணையம் ஆராயவுள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் கண்ணிவெடி அகற்றும் பணி தீவிரம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம் பெறுவதால் யாழ். மாவட்டத்தில் கண்ணி வெடி அகற்றும் பணிகள் தாமதமாகு மெனவும், இதனால் யாழ். குடாநாட்டின் உயர் பாதுகாப்பு வலயப்பகுதி மக்களை மீள்குடிய மர்த்த காலதாமத மாகும் எனவும் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகே தெரிவித்தார்.

வவுனியாவிலிருந்து வரும் உயர்பாதுகாப்பு வலயப்பகுதி மக்களை மீளக்குடியமர்த்த முடியாத நிலை காணப்படுவதாக பிரதேச செயலர்கள் கூறியதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கிளிநொச்சி (14ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய கடமையிலிருந்து ஓய்வுபெறத்திட்டம்



(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தனது கடமையிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக த ஐலண்ட் நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. நேற்றைய இதழில் தலைப்புச் செய்தியாக இத் தகவல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான (14ஆம் பக்கம் பார்க்க)

## பண்ணை மற்றும் அல்லைப்பிட்டிக்கு அமைச்சர்கள் குழு நேற்று விஜயம்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையிலிருந்து யாழ். வந்திருந்த அமைச்சர்கள் குழு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தாவுடன் பண்ணை வீதி மற்றும் அல்லைப்பிட்டிப் பகுதிக்குச் சென்று மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களைச் சந்தித்து அவர்களது குறைபாடுகளையும் தேவைகளையும் கேட்டறிந்து கொண்டனர்.

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தலைமையிலான அமைச்சர்கள் குழுவினரைப் பண்ணைப் பாலப் பகுதிக்குச் செல்லும் வீதியை புனரமைப்புச் செய்ய வேண்டியதன் அவசியத்தை (14ஆம் பக்கம் பார்க்க)

## பங்குச்சந்தை நேற்று வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட அமெரிக்கத் தொழிலதிபர் ராஜ் இராஜரத்தினம் பங்குச்சந்தை முறைகேடுகள் தொடர்பாக அமெரிக்காவில் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் கொழும்பு பங்குச்சந்தையும் நேற்று சரிவைச் (14ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டதும் வடக்கு மாகாணசபைத் தேர்தல்

(யாழ்ப்பாணம்)

நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டதும் வடக்கு மாகாண சபை தேர்தல் நடத்தப்படுமென உள்ளூராட்சிகள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

யாழ். வீரசிங்க மண்டபத்தில் நேற்று மாலை நடந்த உள்ளூராட்சி மாநாடு விருதுவழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்நிகழ்வில் ஆரம்பத்தில் சூரசங்காரம் என்ற நடன நிகழ்வு மேடையேற்றப்பட்டது. அந் நடனத்தை பார்க்கும் போது எனக்கு கடந்த காலங்களில் நாட்டில் நடைபெற்ற நிகழ்வுகளை போன்றது என புரிந்து கொண்டேன்.

வடக்கு மாகாண (14ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் 29 தமிழ் இளைஞர்கள் கைது!

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் 29 தமிழ் இளைஞர்கள் இலங்கைப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சிங்கப்பூரில் இருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட தமிழ் இளைஞர்களே இவ்வாறு விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி அதிகாலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து சிங்கப்பூர் சென்ற 11 தமிழ் இளைஞர்கள் சிங்கப்பூர் விமான நிலையத்தில் இறங்கியபோது அவர்களை சிங்கப்பூருக்குள் அனுமதிக்க மறுப்பு தெரிவித்த குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் அவர்களை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பியுள்ளனர். (14ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியேற்றம் தொடர்பில் இலங்கையுடன் நெருங்கிய உறவு

### இந்.வெளியுறவுச் செயலாளர் தகவல்



(புதுடில்லி)

இடம்பெயர்ந்த மக்களின் உடனடி மீள் குடியேற்றம் தொடர்பில் இலங்கை அரசாங் கத்துடன் நெருக்கமான உறவினை பேணி பேச்சுக்கள் நடத்துவதாக இந்திய வெளியுறவுச் செயலாளர் நிரூபமா ராவ் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்து பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

## மாணவன் படுகாயம்

பாடசாலை மைதானத்தில் கூடைப்பந்தாட்டப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மாணவன் தவறிவீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதில் யாழ். மத்திய கல்லூரியில் தரம் 11 இல் கல்வி பயிலும் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.றபீசன் (வயது-16) என்பவரே காயமடைந்தவராவார். (ச-30)

## கியூடெக் நிறுவனத்தால் பால்மா விநியோகம்

கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தால் நலன்புரி முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டு புங்குடுதீவில் மீள்குடியமர்த்தப்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் 14 பேர்,பாலூட்டும் தாய்மார் 22 பேர் உட்பட 273 பேருக்கு பால்மாவகைகள் வழங்கப்படவுள்ளன.

சஸ்டோஜன்,அங்கர் 1+,அங்கர்3+ ,அங்கர் முழுஆடைப்பால்மா,சமபோஷா உள்ளிட்ட 80ஆயிரத்து 300ரூபாய் பெறுமதியான பால்மாவகைகள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வு அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங் அடிகளார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை மண்டைதீவில் 69 குடும்பங்களுக்கு 64 ஆயிரத்து 630 ரூபாய் பெறுமதியான பால்மாவகைகள் அருட்பணி போல் றொகான் தலைமையில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-6)


**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள் வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் மீள் திருத்திக் கொடுக்கப்படும்.

K.K.S. றோட், இல. 6, கனகசபைலேன், வண்ணார்பண்ணை, சிவலிங்கப்புளியடி.
T.P.:021 222 8680 (C-3524)


# யாழ். வர்த்தகர்களின் வளர்ச்சிக்கு என்.டி.பி.வங்கி உதவியளிக்கும்

## மத்திய வங்கி ஆளுநர் உரை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து தொழில் வழங்குநர்களையும் வியாபாரிகளையும் கோபுரமாக உயர்த்துவதற்கு என்.டி.பி.வங்கி உதவி செய்யும் என இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

என்.டி.பி.வங்கியின் யாழ்.கிளையை யாழ்ப்பாணத்தில் ஸ்ரான்லி வீதியில் திறந்து வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

வங்கித் துறைகளை யாழ்.மாவட்டத்தில் திறப்பதற்கு பலரிடமும் கேட்டபோது யுத்தம் முடிபுற்ற நிலையில் சாத்தியமானது. பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளது. சிறந்த நடவடிக்கை மேற்கொள்ள முடியாது எனத் தெரிவித்தார்.

இருந்த போதும் என்.டி.பி. வங்கி திறந்து வைப்பது மகிழ்ச்சியாகவுள்ளது.இதனை அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.யாழ்.மக்கள் மிகவும் சுறுசுறுப்பானவர்கள். நாம் வரும்போது கமத்தொழிலாளர்களைக் கண்டோம். இவர்களது தொழில்களையும் பார்வையிட்டோம். இவர்களுக்கான தேவைகளை உரிய முறையில் செயற்படுத்துவோம்.

வடக்கு மாகாணத்தை ஜனாதிபதி செழுமையாக மாற்றுவதற்கு எண்ணியுள்ளார். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.இதற்காக வங்கி நிறுவனங்களை வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இந்நிகழ்விற்கு என்.டி.பி. வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர், தலைவர்கள் என முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இலங்கை மத்திய வங்கி 1980ஆம் ஆண்டுக்கு பின்னர் முதற்தடவையாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள் ளது.இதன் மூலம் பல மாற்றங்கள் யாழ். மாவட்டம் அடையவுள்ளது எனத் தெரிவித்தார்.

என்.டி.பி. வங்கியின் திறப்பு விழாவிற்கு கிரிக்கெட் வீரர் சனத்ஜயசூரிய வாடிக்கையாளர்களுக்கு பரிசில்கள் வழங்கினார்.இந்நிகழ்வின் போது பிரதம விருந்தினர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் யாழ்.பஸ் நிலைய பகுதியிலிருந்து மக்கள வாத்தியம் சகிதம் அழைத்து வரப்பட்டு சம்பிரதாயபூர்வமாக நாடாவை வெட்டி திறந்து வைத்தனர். (ச-5)

# தமிழகக் குழு முஸ்லிம்களை உதாசீனம் செய்து விட்டது

## மக்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம்களை உதாசீனம் செய்துள்ளதாகத் தமிழக மற்றும் இலங்கை முஸ்லிம்கள் குற்றம்சுமத்தியுள்ளனர்.

20 வருடங்களுக்கு முன்னர் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் குறித்துத் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது அறிக்கையில் எதனையும் குறிப்பிடவில்லை என முஸ்லிம் சமாதான செயலக இணையத் தளத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதனை ஓர் இன ரீதியான ஒடுக்குமுறையாகவே நோக்க வேண்டும் என புத்தளம் இடம்பெயர் முகாமில் தங்கியிருக்கும் சிரேஷ்ட முஸ்லிம் பிரஜை ஒருவர் தெரிவித்துள்ளார்.

புத்தளம் இடம்பெயர் முகாமுக்கு விஜயம் செய்யுமாறு பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதிலும் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

முஸ்லிம் இடம்பெயர் மக்கள் தொடர்பில் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களின் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை எனவும் இதன்மூலம் அவர்களின் பக்கச் சார்பான தன்மை புலப்படுவதாகவும் விசனம் வெளியிடப்பட்டுள்ளது. வன்னி இடைத்தங்கல் முகாம்களுக்கும் மலையகத்திற்கும் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)


மகளிருக்கான குறுகிய கால பயிற்சிகள்

**கலாலயா** பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

கடந்தமாதம் ஆரம்பமான புதிய வகுப்புகளில் செவ்வாய், புதன் பிரிவுகளுக்கு மட்டும் கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், தையல், Fabric Painting, Saree Work பயிற்சிகளுக்கு குறிப்பிட்டளவு புதிய மாணவிகள் உடன் அனுமதிக்கப்பட உள்ளனர்.

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப. 2.00 மணிவரை நேரில் அறிந்து கொள்ளலாம்.


## யாழ்.மணிக்கூட்டுக் கோபுரம் செயற்படுகிறது

யாழ்.மணிக்கூட்டு கோபுரம் நீண்டகாலத்திற்கு பின் டயலொக் நிறுவனத்தினால் புனரமைக்கப்பட்டு நேற்று முதல் டிஜிற்றல் கடிகாரம் இயக்கப்பட்டுள்ளது.

யாழ்.மணிக்கூட்டுக் கோபுரம் கடிகாரம் பொருத்தப்படாமல் நீண்டகாலமாக கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் டயலொக் நிறுவனம் மணிக்கூட்டுக் கோபுரத்தை புனரமைத்து டிஜிற்றல் கடிகாரத்தை பொருத்த முன் வந்தது.இந்நிலையில் டயலொக் நிறுவனத்தால் பொருத்தப்பட்ட டிஜிற்றல் கடிகாரம் நேற்று முதல் இயக்கப்பட்டது. (ச-5)

# செஞ்சிலுவை சங்க சமூக மீளுகை மீள்கட்டுமான அங்குரார்ப்பண விழா

(கொழும்பு)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சம்மேளனம் ஆகியவற்றின் பொருளாதார உதவியுடன் கட்டுமானத் திட்டத்தை ஐக்கியநாடுகளின் வதிவிட நிறுவனம் மேற்பார்வை செய்து நடத்துவதற்கான 990 வீட்டுத்திட்டங்கள் இரண்டாவது திட்டத்திற்கான அங்குரார்ப்பண விழா நாளை 11.00 மணிக்கு பொலிகண்டி கிழக்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் கௌரவ தேசிய தலைவர் ஜெகத் அபயசிங்க, இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் கௌரவ தேசிய செயலாளர் எஸ். எச்.நிமால்குமார், இலங்கை செஞ்சிலுவைச்சங்க நிதி ஆணைக் குழு கௌரவ தலைவர் பிரசன்ன திஸாநாயக்க ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

சிறப்பு விருந்தினர்களாக சர்வதேச செஞ்சிலுவைக் குழு வதிவிடப் பிரதிநிதி எலினா, ஐக்கிய நாடுகள் வதிவிட நிறுவன பொது முகாமையாளர் பரமேஸ்வரன், பிரதேச செயலாளர், பருத்தித்துறை, பிரதேச செயலாளர், மருதங்கேணி, சமூக சேவை அமைச்சின் இணைப்பாளர், யாழ். மாவட்டம் சில்வேஸ்திரி அலன்றின் (உதயன்) ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இத்துடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க தேசிய தலைமையகத்திலிருந்தும் கொழும்பு பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்களும் இலங்கை வங்கியாளர்களும் மொத்தமாக 28 பேர் கலந்து கொள்கின்றனர்.

இதன் முக்கிய நிகழ்வாக 590 பயனாளிகளுக்கு இவ் வீட்டுத்திட்டத்திற்கான பணம் வைப்பிலிடப்பட்ட இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கு வைப்புப் புத்தகம் வழங்கப்படுகின்றது.

இவ் வீட்டுத்திட்டமானது பயனாளிகள் செஞ்சிலுவைச்சங்கத்திடம் இருந்து பணத்தைப் பெற்று ஐக்கிய நாடுகள் வதிவிடம் ஆலோசனையுடன் தாங்களே வீடமைத்துக் கொள்ளும் ஒரு திட்டமாகும். (ச)


**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை**
**வெளிவாரிப் பரீட்சைகள் – 2008**

I.பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி – I– 2007 (வெளிவாரி)

**மீள் பரீட்சார்த்திகளுக்கான அறிவித்தல்**

கலைமாணி பகுதி- I-2005 & 2006 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 10.11.2009 (செவ்வாய்க்கிழமை) வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள்பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா. 200/= ஆகும். யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா. 100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா. 100/= க்கான காசுக் கட்டளை/ தபாற் கட்டளையை சுய முகவரியிடப்பட்ட ரூபா. 40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28x20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன் உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
19.10.2009 (C-3576)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**பட்டப்பின் படிப்புகள் பீடம்**

**பொது நிர்வாகத்தில் முதுகலைமாணி**
(MA in Public Administration)
**பண்பாட்டியலில் முதுகலைமாணி**
(MA in Cultural Studies)

**முதலாம் அரையாண்டுப் பரீட்சை**

மேற்படி கற்கை நெறிகளுக்கான பரீட்சை எதிர்வரும் 16/11/2009 இல் ஆரம்பமாகும். இதற்கு தகுதிவாய்ந்தவர்கள் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தினை பீடாதிபதி அலுவலகம், பட்டப்பின் படிப்புகள் பீடம், யாழ்.பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை 26/10/2009 இற்கு முன்னர் பீடாதிபதி அலுவலகம், பட்டப்பின் படிப்புகள் பீடம், யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.

மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டையை 06/11/2009 இல் இருந்து பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்
19/10/2009 (C-3579)



அரச உத்தியோகத்தர்கள் ஆங்கிலமொழி ஆசிரியர்கள் ஆகியோரின் ஆங்கில அறிவை மேம்படுத்தும் நோக்கில் வடமாகாண ரீதியான (GTZ) ஜிரிஇஸற் ஸ்ரெப்ஸ் நிலையம் நேற்று யாழ்.கனகரத்தின மகா வித்தியாலயத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி யுற்றாஸினேல் ஆகியோர் இணைந்து நாடாவெட்டி பயிற்சி நிலையத்தை திறந்துவைப்பதையும், வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி மங்கல விளக்கேற்றுவதையும்,வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும்வி . படங்களில் காணலாம்.

## கந்தசஷ்டி உற்சவம்

துன்னாலை அல்லையம்பதி முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி உற்சவம் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றது.தினமும் மாலை 3 மணிக்கு அபிஷேகத்துடன் பூசைகள் ஆரம்பமாகி மாலை 5 மணிக்கு முருகப்பெருமான் வீதிவலம்வருதலுடன் நிறைவு பெறுகின்றது.

இவ் உற்சவ நிகழ்வுகளில் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை சூரசங்கார உற்சவமும், மறுநாள் மாலை திருக் கல்யாண உற்சவத்துடன் கந்தசஷ்டி உற்சவங்கள் நிறைவு பெறவுள்ளன. (ஓ)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய கந்தசஷ்டி உற்சவங்களில் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சூரன்போரும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணிக்கு பாறணையும், மாலை தெய்வானை அம்மன் கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஓ)




## 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

(மருதங்கேணி)

அம்பன் அமெ.மி.தமிழ் கலவன் பாடசாலையில் இவ் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றியோரில் செல்வி லசிந்த கணேசமூர்த்தி 141 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். (ஓ-35)

## பலாலி விமான நிலைய விஸ்தரிப்பிற்கான காணி சுவீகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பதற்காக மயிலிட்டி தெற்கு, மயிலிட்டி வடக்கு, பலாலி ஆகிய பகுதிகளில் சுவீகரிக்கப்பட்ட காணியின் உரிமையாளர்களை இது தொடர்பாக உள்ள ஆவணங்களுடன் தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவின் காணிக்கிளையுடன் வியாழக்கிழமைகளில் தொடர்பு கொள்ளுமாறு தெல்லிப்பளைப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் அறிவித்துள்ளார். (ஓ)

## தவறவிட்ட பொதிகளை பெற்றுக்கொள்க

(யாழ்ப்பாணம்)

கடந்த வியாழக்கிழமை அன்று வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து அழைத்துவரப்பட்டவர்களால் தவறவிடப்பட்ட பொதிகள் சில யாழ். பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு தவறவிடப்பட்ட பொதிகளுக்குரியவர்கள் அவற்றிற்குரிய ஆதாரங்களைச் சமர்ப்பித்து தங்களது பொதிகளைப் பெற்றுக்கொண்டு செல்லுமாறு யாழ்ப்பாணப் பிரதேச செயலர் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## ‘சொண்ட்’ நிறுவனத்தின் சிறுவர்களுக்கான செயற்திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதி அனுசரணையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் சண்டிலிப்பாய் மத்தி மற்றும் பண்டத்தரிப்பு ஆகிய கிராமசேவகர் பிரிவுகளிலும், நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவிலும் சிறுவர் இல்லங்களில் உள்ள பிள்ளைகளை பெற்றோர்களுடன் இணைத்தல் செயற்பாட்டுக்காக அக் குடும்பங்களுக்கான வருமான அதிகரிப்புச் செயற் திட்டத்தையும், சிறுவர் இல்லங்களில் இணையவுள்ள சிறுவர்களின் பெற்றோர்களுக்கான வருமான அதிகரிப்புச் செயற்பாட்டுக்கான உதவித் திட்டத்தையும் மேற்கொண்டு வருகின்றது.

இச் செயற்பாட்டின் கீழ், 52 பயனாளிகள் உள்வாங்கப்பட்டுள்ளதுடன் கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு, சிறுவியாபாரம், பன்னவேலை,நல்லெண்ணை தயாரிப்பு போன்ற தொழிலுக்கான உதவி பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுதவிர சிறுவர் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கல், பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.(ஓ-30)

## கடமையின் பொருட்டு ஏ9 வீதியூடாக வாகனங்களில் பிரயாணம் செய்பவுள்ளோருக்கு

தமது கடமையின் நிமித்தம் வவுனியா அல்லது கொழும்பிற்குப் பிரயாணம் செய்யவிருக்கும் அரசு உத்தியோகத்தர்கள், சமயத் தலைவர்கள் பிரயாணம் செய்வதற்குரிய அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடு தற்பொழுது யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆதலால் அவ்வாறு பிரயாணம் செய்ய வேண்டியவர்கள் தமது விண்ணப்பங்களை அரசாங்க அதிபர் ஊடாக உரிய படிவங்களில் முழு விபரங்களுடன் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதிக்கு அனுப்பி வைக்குமாறும் இது விடயமான மேலதிக விபரங்களை மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலக கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம் எனவும் யாழ். அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ஓ)

## உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்ட — விற்பனையும் கண்காட்சியும் —

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞானத் தொழில்நுட்பவியல் அமைச்சானது உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்டு மாபெரும் விற்பனையும் கண்காட்சியும் நிகழ்வை நவம்பர் மாதம் 1, 2 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் மாவட்ட மட்டத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

அமைச்சின் கீழ்வரும் இலங்கை கோள் மண்டல நிறுவனம், ஆர்தர்.சி.கிளார்க் நிறுவனம், அணுசக்தி அதிகாரசபை, தேசிய விஞ்ஞான மன்றம், தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம், இலங்கை தரக்கட்டளைகள் நிறுவனம் (SLS) , கைத்தொழில் தொழில்நுட்பநிறுவனம் போன்ற ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனங்களும் பங்குபற்றவுள்ளதோடு உள்ளூர் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களின் உற்பத்திப் பொருட்களும் புதிய கண்டுபிடிப்பாளர்களின் தொழில்நுட்பம் சார்ந்த கண்டுபிடிப்புக்களும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் தமது உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்த விற்பனை செய்ய விரும்புவர்கள் விபரங்களை தங்களது பிரதேச செயலகத்தில் உள்ள விஞ்ஞான தொழில்நுட்ப அலுவலரிடமோ அல்லது குறிப்பிட்ட நிகழ்வின் பொருட்டு பிரதேச செயலரினால் நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலரிடமோ இம்மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யமாறு யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## இளைஞர்களுக்கான பயிற்சிநெறிகள்

(யாழ்ப்பாணம்)

சொண்ட் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் இளைஞர்களுக்கான பயிற்சிநெறிகள் இன்று செவ்வாய்க்கிழமை நிறுவன அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இளைஞர்களின் சுயமுன்னேற்றம் கருதி நடத்தப்படும் இப் பயிற்சி நெறியில் கோப்பாய், சண்டிலிப்பாய், நல்லூர்,யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 35 இளைஞர்கள் கலந்துகொள்ளவுள்ளதாக நிறுவனத் திட்ட உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (ஓ-4-30)

## சிறப்புச்சொற்பொழிவு

(மருதங்கேணி)

வல்வெட்டித்துறை பீருவில் வயலூர் முருகன் ஆலயத்தின் கந்தசஷ்டிகால உற்சவத்தில் தினமும் மாலை 4.30 மணிக்கு கந்தபுராணம் எனும் விடயம் பற்றி சைவப்புலவர் பொன்.சுகந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (6-4-35)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு யாழ்.பல்கலைக்கழகத்திற்கு தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர வந்துள்ள மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இக் கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் நடைபெற இருப்பதால் சம்பந்தப்பட்ட அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுக் கொள்கின்றது. (ஓ)

## மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் தெரிவு

(நல்லூர்)

சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மத்தியஸ்தர் சபைகள் ஆணைக்குழுவினால் மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தவிசாளராக ப.நடராஜா -சாவகச்சேரி உபதவிசாளராக செ.சபாரத்தினம் -சாவகச்சேரிஆகியோரும் சபை உறுப்பினர்களாக செ.பேரின்பநாதன்-கைதடி, திருமதி த.சுபத்திரா-கைதடி,த.தர்மகுலசிங்கம் -கைதடி, வே.இரத்தினசிங்கம் -மந்துவில், கா.கணேச பாலசுந்தரம் -மந்துவில், திருமதி சி.சறோஜினிதேவி-கொடிகாமம்,மு.காசித்தம்பி -கொடிகாமம், செல்வி வே.திரவியநாயகம் -கொடிகாமம், க.சபாநாயகம் -சரசாலை, ப.சண்முகசுந்தரம் -மட்டுவில்,வே.கிருஷ்ணன் -மட்டுவில்,எஸ்.அப்புத்துரை -மட்டுவில், திருமதி வ.உதயரஞ்சினி-வரணி, எஸ்.வி .சதாசிவம்-நுணாவில்,கே.எஸ்.ஆறுமுகம் -நுணாவில்,சிவஸ்ரீ க.கிருபானந்தக்குருக்கள் -சாவகச்சேரி, செ.மகேஸ்வரன் -மீசாலை, க.தம்பு-மீசாலை ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ஓ-134-4)

## விவசாயிகளுக்கான சுயதொழில் உதவிகள்



(யாழ்ப்பாணம்)




கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தினால் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள விவசாயிகளுக்கு சுயதொழிலுக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதில் தெரிவுசெய்யப்பட்ட 35 விவசாயிகள் ஒவ்வொருக்கும் தலா ரூபா 5000 பெறுமதியான விவசாய உபகரணங்கள் மற்றும் விதை வகைகளும், 3 விவசாயக் கிணறுகள்,15 நீர் இறைக்கும் இயந்திரங்கள், இயற்கைப் பசளை தயாரிக்கும் தொகுதிகள் இரண்டு என்பன வழங்கப்படவுள்ளது.



அத்துடன் 15 பயனாளிகளுக்கு வாகனம் செலுத்துவதற்கான பயிற்சி வழங்கப்பட்டு, சாரதி அனுமதிப்பத்திரமும் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.உரிய விவசாயிகளுக்கு நவம்பர் மாதம் முதல் இவ் உதவிகள் அந்தந்த கிராமஅலுவலர் பிரிவுகளில் வைத்து வழங்கப்படவுள்ளன. (ஓ-30)

# என்.டி.பி. வங்கியின் யாழ். கிளை திறப்பு விழா




என்.டி.பி.வங்கியின் யாழ். கிளை திறப்புவிழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வங்கியை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் திறந்து வைப்பதையும் ஜனாதிபதியின் வங்கித்துறை ஆலோசகர் கலாநிதி ராணிஜெயகம, மத்திய வங்கி உதவி ஆளுநர் கருணாரத்தன, என்.டி.பி.வங்கியின் தலைவர் நாகாவர்த்தன, பொதுசன முகாமையாளரும் கிரிக்கெட் வீரருமான சனத் ஜெயசூரியா, விசாரணை அதிகாரி, நிறை வேற்று அதிகாரி, முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முக லிங்கன், ஆகியோர் மக்கல விளக்கேற்றுவதையும் முதலாவது வைப்பினை ஈ.எஸ்.பி.நிறுவன உரிமை யாளர் மேற்கொள்வதையும் படங்களில் காணலாம்.

# உள்ளூராட்சி விருது வழங்கும் நிகழ்வுகள்








உள்ளூராட்சி விருது வழங்கும் நிகழ்வில் மங்கல விளக்கேற்றுவதையும் சமூகசேவை கள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரச அதிபர் க.கணேஷ், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் ஆகியோர் கௌரவிக் கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட வர்களையும் படங்களில் காணலாம்.

# விஜய நகரப் பேரரசு

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

### பேராசிரியர் க.அ.நீலகண்டசாஸ்திரிகள்

30

சிவசமுத்திரம் வீழ்வதற்கு ஓராண்டுக்கு மேல் பிடித்தது. அங்கிருந்து தப்பியோடிய கங்கராயன் காவிரியில் மூழ்கி இறந்து போனான். சிவசமுத்திரத்தை விஜயநகரப் படைகள் தரைமட்டமாக்கின. கங்கராயன் மீது கிருஷ்ணதேவராயன் தொடுத்த போர் 1510 ஆகஸ்டில் தொடங்கி 1512 இன் இறுதியில் முடிந்தது.

இவ்வாறு தான் வென்ற புதிய பகுதிகளைக் கிருஷ்ணதேவராயன் ஒரு புதிய மாகாணமாக்கி அதற்குச் சீரங்கப்பட்டணத்தைத் தலைநகராக்கினான். புதிய மாகாணத்திற்குச் சாளுவ கோவிந்தராயன் முதல் ஆளுநனாக நியமிக்கப்பட்டான். அந்த மாகாணத்தின் உள்ளூராட்சி மூன்று உள்ளூர்த் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்களுள் ஒருவன் தான் புகழ்பெற்ற பெங்களூர் கெம்பே கவுடன்.

சாளுவ நரசிம்மனுடய காலத்திலிருந்தே பேரரசின் கீழ்க் கடற்கரை மாவட்டங்களைத் தன்வசப்படுத்திக் கொண்டிருந்த ஓரிசா அரசனோடு கிருஷ்ணதேவராயன் அரியணையேறிய சிறிது காலத்திற்குள்ளாகவே போர் தொடங்கினான்.

ஆனால், கங்கராயரோடு தொடங்கிய போர் வெற்றியுடன் முடிந்த பிறகு தான் இந்த மூன்றாம் முனைப்போரைக் கிருஷ்ண தேவராயன் உண்மையான ஊக் கத்துடன் நடத்தினான். 1513 இல் உதய கிரியை முற்றுகை இடுவதற்குக் கிருஷ்ண தேவராயன் ஒரு படையை அனுப்பினான். விரைவில் கிருஷ்ணதேவராயனே நேரிற் சென்று போரை நடத்தினான்.

குன்றின் மீதிருந்த கோட்டையை அடைவது முடியாத காரியமாய் இருந்ததால் கிருஷ்ணதேவராயன் பாறைகளை வெட்டிப் புதிய பாதைகளை பலவற்றைப் போட்டான். அந்தப் பாதைகளின் வழியாக அவனுடைய படைகள் ஏறிச் சென்று கோட்டையை அடைந்தன. இவ்வாறு முற்றுகையை தொடக்கி ஒன்றரையாண்டுக்குப் பின் விஜயநகரப் படைகள் உதயகிரியைப் பிடித்தன.

தலைநகருக்குத் திரும்புகிற வழியில் கிருஷ்ணதேவராயனும் அவனுடைய மனைவிகளான திருமலாதேவியும் சின்ன தேவியும் திருப்பதிக்குச் சென்று வேங்கடனை வணாங்கித் தங்களுடைய நன்றிக் கடனைச் செலுத்தினார்கள். (1514 ஜூலை) மேலும் அவன் உதயகிரியிலிருந்த அழகிய பாலகிருஷ்ண விக்கிரகம் ஒன்றை எடுத்துக்கொண்டு போய் விஜயநகரில் எழுந்தருளச் செய்தான். வியாசராயர் என்ற ஞானி புதிய பாடல்களை இயற்றி அந்த நன்னிகழ்ச்சியைப் பாராட்டினார். இவ்விரு செயல்களும் கிருஷ்ண தேவராயனுடைய கடவுள் பக்திக்குச் சான்று தருகின்றன.

உதயகிரியை முற்றுகையிலி ருந்து விடுவிப்பதற்குப் பிரதாபருத்திரன் செய்த முயற்சி தோல்வியடைந்தது. அவனு டைய படைகளை விஜயநகரப் படைகள் கொண்டவீடு வரையிலும் துரத்திச் சென்றன. போகும் வழியிலிருந்த சிறிய கோட்டைகள் எல்லாவற்றையும் விஜயநகரப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

சில கோட்டைகள் தாமாகவே பணிந்தன. இவ்வாறு வெற்றிமேல் வெற்றி பெற்ற விஜயநகரப் படைகள் கைப்பற்றிக் கொண்டன. சில கோட்டைகள் தாமாகவே பணிந்தன. இவ்வாறு வெற்றிமேல் வெற்றி பெற்ற விஜயநகரப் படைகள் கடைசியில் கொண்டவீட்டை வளைத்துக்கொண்டன. அந்த முற்றுகையை முதலில் சாளுவ திம்மரசான் முன்னின்று நடத்தினான்.

அதன்பின் கிருஷ்ணதேவராயனே தன் படைகளுக்குத் தலைமை தாங்கினான். கிருஷ்ணா நதிக்குத் தெற்கில் கஜபதி யின் ஆட்சியிலிருந்த மாவட்டங்களில் கொண்ட வீடு மிக முக்கியமான கோட்டையாய் இருந்ததால் அது படை வலிமை மிக்கதாக இருந்தது. மேலும், ஓரிசா ராஜ்யத்தின் முக்கியமான தலைவர்கள் பலர் அதற்குள்ளிருந்து காவல் புரிந்தனர். முற்றுகை பல மாதங்கள் தொடர்ந்து நடந்தது. கோட்டைக்குள்ளிருந்த பலர் உணவின்றி இறந்து போயினர். அதன் பிறகுதான் விஜயநகரப் படைகள் மதிற்சுவர்களின் மீதேறிக் கோட்டைக்குள் நுழைந்து அங்கிருந்த வீரர்களைத் தோல்வியுறச் செய்து கோட்டையைப் பிடிக்க முடிந்தது. ஓரியப் பிரபுக்கள் பலரும் கஜபதியரசனுடைய மனைவியும் அவனுடைய மகன் ஒருவனும் சிறை பிடிக்கப்பட்டு விஜயநகருக்கு அனுப் பப்பட்டனர்.

கொண்டவீடு மாவட்டத்தின் நிர்வாகப் பொறுப்பை சாளுவ திம் மனிடம் ஒப்படை த்துவிட்டு கிருஷ்ண தேவராயனும் அவன் மனைவிமாரும்அமரேஸ்வரரை வழிபடு வதற்காக அமராவதிக்குச் சென்றார்கள். அங்கிருந்து அவர்கள் ஸ்ரீசைலத்துக்குச் சென்று, மல்லிகார்ஜுனரை வழிபட்டு அந்தக் கோயிலுக்கு மிகத் தாராளமான கொடைகளை அளித்த பின் தலைநகருக்குத் திரும்பினார்கள்.

அதன்பின் வெகு விரைவில் அவன் தன் படைகளோடு மீண்டும் போர்க்களம் புகுந்தான். தலைநகரிலிருந்து விஜயவாடாவுக்குத் தன் படைகளை நடத்திச் சென்று, அந்த நகரைப் பிடித்து அதனைத் தன் முன்னேற்றத்தனமாக்கிக் கொண்டான். அவன் மனம் போரிலேயே ஈடுபட்டிருந்ததெனினும், விஜயவாடாவுக்குப் போகும் வழியில் அகோபலத்தில் நின்று நரசிம்மனை வழிபடுவதற்குத் தன்னுடைய நேரத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்தான்.

விஜயவாடாவுக்கு வடமேற்கில் சிறிது தொலைவிலுள்ள கொண்ட பள்ளியின் மீது அது உயர்ந்த மதில்களையும் நல்ல காவலையும் பெற்ற ஒரு வலிமை மிக்க கோட்டை அதனைக் கிருஷ்ணதேவராயன் முற்றுகையிட்டான். முற்றுகையை நீக்குவதற்காகப் பிரதாபருத்திரன் அனுப்பிய படையை கிருஷ்ணதேவராயன் கிருஷ்ண நதியின் கரையில் மறித்துத் தோல்வி யடையச் செய்தான். முற்றுகை இரண்டு மாதங்கள் நீடித்தபின் கோட்டை வீழ்ந்தது. அதன்பின் கிருஷ்ண தேவரயன் தெலிங்கானாவிலிருந்த வேறு பல கோட்டைகளையும் கஜபதியின் மேலாதிக்கத்தில் இருந்த நலகொண்டா, வாரங்கல் மாவட்டங்களின் பல பகுதிகளையும் கைப்பற்றினான்.

இவ்வாறு தெலிங்கானா முழுவதும் விஜயநகர ஆட்சிக்குள் வந்தது. அதன்பின் கலிங்கம் என்ற பெயருக்குரிய நாட்டின் மீது கிருஷ்ணதேவராயன் படையெடுத்து ராஜமகேந்திரவரத்தையும் வேறு பல நகரங்களையும் கைப்பற்றினான்.

விஜயநரகப் படையின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு கஜபதி ஓரளவுமுயன்றான். ஆனால், விஜயநகரப் படை வழியிற் கண்ட ஊர்கள் அனைத்தையும் அழித்துக் கொண்டே பொட்னூர் சிம்மாத்திரி வரையிலும் வெற்றியுடன் முன்னேறியது. அந்த இடத்தில் கிருஷ்ணதேவராயன் ஒரு வெற்றிக் கம்பத்தை நாட்டிவிட்டு ராஜமகேந்திரவரத்தின் வழியாய்த் தன்னுடைய தலைநகருக்குத் திரும்பினான் (1516).


ஆனால், அவனுடைய படைகள் கலிங்க நாட்டுக்கள் மேலும் முன்னேறி, அந்த நாட்டின் தலைநகரான கட்டாக்கை அடைந்தன. அதனால் பேராபத்துக்குள்ளான பிரதாபருத்திரன் சமாதானஞ் செய்து கொள்ள விரும்பித் தன் மகளைக் கிருஷ்ணதேவராயனுக்கு மணமுடித்து வைத்தான். கிருஷ்ணதேவராயனும் மிகத் தாராள மனத்துடன் நடந்து கொண்டான். கிருஷ்ண நதிக்கு வடக்கிலிருந்த ஊர்கள் அனைத்தையும் அவன் கஜபதிக்கே திருப்பிக் கொடுத்துவிட்டான். (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

### ஜம்பொன்

153



எல்லாக் கருத்துக்களையும் அலசி ஆராய்ந்து திட்டமிடும் ஜனநாயகம் இது. (DELIBERATIVE DEMOCRACY) இங்கே எல்லாப் பிரஜைகளும் தங்கள் கருத்துக்களை புறநிலை யதார்த்தங்களோடு ஏற்புடையவையா என்று பரீட்சித்துப் பார்த்தும், ஏனையவர்களையும் தங்கள் கருத்துக்கிசையுமாறு எடுத்துச் சொல்லியும் சம்மதத்தை ஏற்படுத்த தூண்டுவது தான் இந்த ஜனநாயகம். அமெரிக்க அரசாங்கத்தின் அதிகாரம் பற்றி தெளிவின்மை நிலவுகின்றது. ஆகவேதான் சட்டங்களை இயற்றும்போது அமெரிக்க மக்கள் தாங்கள் தவறு இழைக்கலாம். மனம் மாறலாம் என்ற கருதுகோளைக் கொண்டுள்ளனர். இது அமெரிக்கர்களை தங்கள் நோக்கம் என்ன ஆர்வம் எதில் என்று கண்டறியுமாறு சவால் விடுகிறது. தனியாளினதும் ஒட்டுமொத்தமான மக்களினதும் தீர்மானங்கள் நியாயமான வையாகவும் அதே நேரத்தில் தவறானதாகவும் இருக்கலாம் என்பதை குறிக்கிறது.

ஸ்தாபகர்கள் வெறுத்து ஒதுக்கியுள்ளது எல்லா விதமான சர்வாதிகாரங்களுமாகும். அரசன் அல்லது மதகுருமார்கள், இராணுவ அதிகாரிகள், சிறு குழுக்கள், சர்வாதிகாரி, பெரும்பான்மையினர் ஆகியவர்களின் ஆட்சியை அவர்கள் வெறுத்தனர். யாரும் மக்களுக்குத் தேவையானவற்றை தேர்ந்தெடுத்து வழங்கும் அதிகாரம் உடையவர்களாக இருக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்கள்.

அமெரிக்காவின் அரசியல் யாப்பின் கர்த்தாக்கள் யதேச்சதிகாரம் மட்டுமன்றி உண்மையையும் கூட மறுத்தனர். அதாவது எந்தக் கருத்தும், வாதமும் நிரந்தர சத்தியமாக இருக்க முடியாது என்று கருதினர்.


நீண்டகாலம் நிலைத்திருக்கும் தீமை பயக்கத்தக்க எதுவும் எதிர்காலச் சந்ததியை மாற்றமுடியாத ஒன்றேயான போக்கில் செலுத்திப் பூட்டிவிடும் என்பது அவர்களின் கருத்து. தங்கள் கருத்து தவறானதல்ல என்று யாரும் எண்ணினால், அது பெரும்பான்மையினரையும் சிறுபான்மையினரையும் கொடுமையிழைக்குமாறு தூண்டிவிடும்.

விளக்கமின்றி மரணதண்டனை வழங்கல், இனத்துவேஷத்தின் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்களை வேணுமென்றே கொன்றொழிப்பது ஆகிய கொடுமைகள் விளையலாம் என்று கருதினர். இந்த ஸ்தாபகர்கள் முதலில் கடவுளை நம்பினார்கள். அவரால் மனிதனுக்களிக்கப்பட்ட மனங்களையும் உணர்வுகளையும் நம்பினார்கள்.

பல நூற்றாண்டு காலமாக அமெரிக்க - ஐக்கியம் அசையாது நீடித்து நிலைத்துள்ளது. பொருளாதாரச் சீர்குலைவிலும், உலக யுத்தங்களின் ஊடாகவும், பன்முக மாற்றங்கள் நிகழ்ந்தபோதும் பல இலட்சம் புதிய மக்கள் உள்ளே வந்த போதும் அமெரிக்க ஜனநாயகம் உயிர் பிழைத்துள்ளது மட்டுமன்றி வளர்ந்துமிருக்கிறது.

சுதந்திரம் பிரகடனம் (The Declaration of Independence) மனித வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். அது எல்லா மக்களும் சமமானவர்கள் என்றும் அடக்கு முறை அடியோடு அகற்றப்படும் என்றும் பிரகடனம் செய்கிறது. ஆனால் இந்த சுதந்திர உணர்வை ஸ்தாபகர்கள் அமெரிக்காவின் அடிமைகளுக்கு கொடுக்க மறந்துவிட்டார்கள். இல்லை மறுத்துவிட்டார்கள். ஆனால் அவர் களின் மௌனம் பின்பாடு நிகழப்போகும் குடியுரிமைப் போராட்டங்கள் போன்றவைகள் மூலம் அடிமைத் தளை ஒரு காலத்தில் அறுந்து விழும் என்று எண்ணி அதுபற்றி குறிப்பிடாமல் விட்டு விட்டனர் போலும். ஒபாமா ஆபிரிக்க இரத்தம் கலந்த அமெரிக்கன் அவரால் மேற்போந்த விவாதத்தில் பக்கச் சார்பாக இருக்கமுடிய வில்லை. அவர்தான் பிறந்த மண்ணை அமெரிக்காவை உயிரிலும் அதிகமாக நேசிக்கிறார். அமெரிக்க நிறுவனங்களின் அழகிலும் அலங்கோலங்களிலும் அதிக ஈடுபாடு கொண்டிருப்பதால் தான் பிறந்த சூழலையிட்டு கவலைப்பட முடியாதுள்ளார். ஆயினும் நடந்து முடிந்த அநியாயங்களை புறந்தள்ள முடியவில்லை. கடந்த காலங்களில் பரம்பரை பரம்பரையாக வந்த நினைவுகளை மனதில் இருந்து அழிக்கமுடியவில்லை. (தொடரும்)

# வயிற்றெரிவு / குடற்புண்



⌖ குடலெரிவு என்பது இன்று பொது மக்களிடையே பொதுவாக காணப்படும் ஓர் நோயாகும். இது மேல் நாட்டு மருத்துவ முறையில் பெப்ரிக் அல்சர் (gastric, deodenal Ulcer) என்றும் ஆயுர் வேதத்தில் அமில பித்தம் என்றும் சித்த வைத்தியத்தில் குன்மம் என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

⌖ தற்காலத்தில் முதியோர் இளையோர் என்ற பேதமின்றி அனேகமானோர் மத்தியில் அதிகரித்து வரும் இந்நோயானது எமது உணவு. உணவுப்பழக்க வழக்கங்களுடனும் எமது நாளாந்த வாழ்க்கை முறைகளுடனும் ஏன் மனநிலையிலும் முக்கியமான தொடர்புடைய நோயாகக் காணப்படுகின்றது. அது மட்டுமல்லாமல் மக்கள் மத்தியில் இதற்கான சிகிச்சையை சரியான முறையில் சிகிச்சை பெறாத தன்மையும் அலட்சியப்படுத்தும் மனப்பாங்கும் காணப்படுவது மிகவும் ஆபத்தான நிலைமைகளான குடற்புண், குடற்புற்று நோய்களையும் உண்டாக்குவதற்கு காரணமாகவும் அமைவதுண்டு.

⌖ எமக்கு பசியையும் உணவு அகத்துறிஞ்சல் சமிபாடு ஆகியவற்றுக்கு மூலகாரணமாயுள்ள பாசகபித்தத்தின் மாறுபாடான குணம் செயற்பாடு இவற்றாலேயே இந் நோய் ஏற்படுகின்றது.

**இந்நோய் ஏற்பட பொதுவான காரணங்கள்**

- ⌖ தினசரி வாழ்க்கையில், குறித்த நேரத்தில் உணவு உட்கொள்ளாமை.
- ⌖ பட்டினி இருத்தல்.
- ⌖ அதிகமான மசாலா கார - மிளகு, சீரகம், கடுகு, மிளகாய் சேர்த்தல்.
- ⌖ அதிகமான புளிப்பு சுவையான உணவு தினமும் உள்ளெடுத்தல்.
- ⌖ வினாகிரி, தக்காளி, கொழுப்புணவு அதிகளவில் பாவித்தல்.
- ⌖ மதுபாவனப் பாவனை, புகைப்பிடித்தல் போன்ற தீய பழக்கவழக்கங்கள்.
- ⌖ மனவிகாரங்களாகிய கோபம், பொறாமை, குரோதம், பேராசை.
- ⌖ கவலை, பயம், மனஉளைச்சல்.
- ⌖ கோப்பி, சொக்கலேட், அதிக குளிர் பானங்கள் உள்ளெடுத்தல்.

இவற்றுடன்

- ⌖ வேறு நோய்களுக்காக உள்ளெடுக்கப்படும் வேதனாசாந்தினி மருந்துகளும்
- ⌖ மருந்து மாத்திரைகள் அதிகளவிலும் சரியான முறையிலும் பாவிக்காமை.

இவ்வாறான காரணங்களால் ஏற்படும் இந் நிலைமையை காலம் தாழ்த்தாது வைத்திய ஆலோசனை பெற்று சிகிச்சை பெறுவதுடன்

சரியான முறையில் பராமரித்து பத்தியமான உணவு நடைமுறையை மேற்கொண்டு அபத்தியமான நடைமுறைகள், உணவுகளைத் தவிர்த்தலும் தகுந்த நிவாரணமாக அமையும் என்பது முக்கியமானதாகும்.

**நோய்க்கான குறிகுணங்கள்**

**முக்கியமாக**

- ⌖ வயிற்றெரிவு
- ⌖ வயிற்று வலி
- ⌖ வயிறு நிரம்பிய உணர்வு
- ⌖ வயிற்றுப் பொருமல்
- ⌖ பசியின்மை
- ⌖ புளித்தேப்பம்
- ⌖ உணவு ருசியின்மை
- ⌖ உணவு உட்கொள்ளும் போது
  - வாந்தி
  - நெஞ்செரிவு
  - வயிற்றுப் பிரட்டு

**இக்குணம் குறி காணப்பட்டால்**

- ⌖ கொழுப்பு நிறைந்த உணவுவகைகள் - பொரியல், கொழுப்பு போன்றவை. காரம், மசாலா அதிகம் சேர்த்து சமைக்கப்பட்ட உணவு போன்றவற்றை பாண், றோல்ஸ் Pastry பணிஸ் போன்ற உணவுகளை நோய் காணப்படும் நிலையில் தவிர்த்தலுடன்
- ⌖ வயிற்றுக்கு குளிர்ச்சியையும் சாந்தத்தையும் ஏற்படுத்தும் உணவுகளையும் உணவு பானங்களையும் உட்கொள்ளல் அவசியம்.
- ⌖ பசும்பால், பயறு, இலைக்கஞ்சி, கெக்கரிக்காய், வெள்ளரிப்பிஞ்சு, தார்ப்பூசினி (வத்தக), நீற்றுப் பூசினி, தாமரை வளையம், கொகிலக்கிழங்கு, கொள்ளு, பிஞ்சு வாழைக்காய் ஆகியவை சிறப்பானவை.
- ⌖ பிரதான உணவாக சோற்றுடன், மரக்கறி சிறிய மீன் வகை அதிகளவில் உள்ளெடுப்பதுடன்
- ⌖ நெடுநேரம் சமைத்த, பழைய உணவுகள், பழுதடைந்த உணவுகள் தவிர்த்தல் முக்கியம்.

**குடலெரிவு நிலைமையை தவிர்க்க**

- ⌖ செயற்கை உப்புக்கள், கனிப்பொருட்கள், சுவையூட்டிகள், இரசாயனத் திரவியங்கள் அதிகமாகச் சேர்க்கப்படும் விற்பனைப் பொருட்களின் பாவனையை தவிர்த்தல்.
- ⌖ தூய்மையாக உடன் தயாரித்த உணவு உண்ணல்.
- ⌖ நேரம் தவறாது உணவு உண்ணல் வயிறு நிரம்பும் வரை உணவு உட்கொள்ளுதலை தவிர்த்தல்.
- ⌖ பட்டினியிருத்தலைத் தவிர்த்தல்.
- ⌖ மாப்பண்டங்களை அளவுக்கதிகமாக உள்ளெடுத்தலைத் தவிர்த்தல்.
- ⌖ வயிற்றில் உண்ட உணவு சமிபாடடையும் போது பால், அல்லது நீர் பருகுதல்.
- ⌖ தூக்கம் விழித்தலைத் தவிர்த்தல்.
- ⌖ ஏனையோருக்குத் தீங்கு விளைவித்தலைத் தவிர்த்தல்.
- ⌖ சந்தோஷமாகவும் எளிமையானதாகவும் வாழ்க்கை முறையை மேற்கொள்ளல்.

**வெளியீடு**
**ஆயுர்வேத திணைக்களம்**
**நாவின்ன, மகரகம.**

## இவ்வருட இறுதிக்குள் அரசதுறையில் உள்ள சகல வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை

### அமைச்சர் சரத் அமுனுகம

(கொழும்பு)

அரச துறையில் காணப்படும் சகல வெற்றிடங்களையும் இவ்வருட இறுதிக்குள் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது,


அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக்கும் பொருட்டு மிக நீண்டகாலமாக நிரப்பப்படாமல் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கிராம உத்தியோகத்தர் சேவை, முகாமைத்துவ சேவை, இலங்கை நிர்வாக சேவை போன்ற சேவைகளிலுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படும் என அவர் கூறினார்.

அரச முகாமைத்துவ சேவையில் 3 ஆயிரம் வெற்றிடங்களும், கிராம உத்தியோகத்தர் சேவையில் ஆயிரம் வெற்றிடங்களும் இலங்கை நிர்வாக சேவையில் 300 வெற்றிடங்களும் இதுவரை நிரப்பப்படாமல் காணப்படுகின்றன. இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## மக்களின் பேச்சைக்கேட்டு அதன்படி இயங்குபவன் உண்மையான தலைவனாக முடியாது

### ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

மக்களின் பேச்சைக் கேட்டு அவர்கள் சொல் வது போல இயங்குபவன் நாட்டின் உண்மை யான தலைவன் இல்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம் பெற்ற நிகழ்வொன் றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மக்களின் எண்ணங்களை மாற்றி அவர் களை சரியான வழியில் இட்டுச் செல்பவரே சரியான் தலைவன் என அவர் இதன் போது குறிப்பிட்டார்.

இதற்கிடையில் உலகின் சில நாடுக ளிலும் இலங்கையிலும் பயங்கரவாதத்தை தோற்கடிக்க முடியாது என்ற எண்ணம் காணப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

எனினும் இளைஞர்களின் உதவியோடு அந்த எண்ணத்தை முறியடித்து பயங்கரவாதத்தையும் தோற்கடித்ததாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ஓ-7)

## ஆணையிறவு புகையிரத நிலைய புனரமைப்பிற்கு ரூபா 10மில். நிதியுதவி

(கொழும்பு)

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சின் பங்களிப்புடன் ஆணையிறவு புகையிரத நிலைய புனரமைப்புப் பணிகளுக்காக இதுவரையிலும் 10 மில்லியன் ரூபா நிதி உதவி கிடைக்கப் பெற்றுள்ளதாக புனரமைப்புப் பணிக்கான அமைச்சின் இணைப்பாளர் பத்தம சாந்த தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த சூழ் நிலைகளினால் வடக்கிற்கான ரயில் சேவைகள் தண்டவாளங்கள் முற்றாக பாதிப்படைந்திருந்தன. பயங்கரவாதம் முற்றாக அழிக்கப்பட்டதன் பின்னர் வடக்கை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் வட மாகாணத்திற்கான ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் போக்குவரத்து அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் நிமித்தம் வடக்கிலுள்ள ரயில் நிலையங்கள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றன. இதனொரு அங்கமாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் நல்லுள்ளம் படைத்தோரின் நிதி உதவியின் மூலமாக சகல வசதிகளுடன் கூடியதாக ஆணையிறவு புகையிரத நிலையத்தை புனரமைப்பதற்கான வேலைத்திட்டத்தினை போக்குவரத்து அமைச்சுடன் இணைந்து கல்வி அமைச்சு மேற்கொள்ளவுள்ளது.

நேசத்தின் தரிப்பிடம் என பெயர் சூட்டப்பட்டுள்ள ஆணையிறவு ரயில் நிலையம் நூலகம், கேட்போர்கூடம், தங்குமிட வசதி போன்ற பல்வேறு வசதிகளுடன் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது என்றார். (ஓ-6)

## பசில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய மாட்டார்

### ஆங்கில இணையத்தளம் செய்தி

(கொழும்பு)

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய மாட்டார் என ஆங்கில இணைய தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே பதவி விலகுவதாக தீர்மானித்திருந்த போதிலும் அந்தத் தீர்மானம் குறித்து தற்போது ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது சகோதரர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரச்சாரப் பணிகளை ஒருங்கிணைக்கும் நோக்கில் தமது பதவியை ராஜினாமா செய்ய உள்ளதாக அவர் அறிவித்திருந்தார்.

குறித்த பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு தென் மாகாணசபை உறுப்பினர் ஹேமால் குணசேகர நியமிக்கப்படுவார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இன்று செவ்வாய்க்கிழமை தமது பதவி விலகல் தொடர்பில் பசில் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் அறிவிப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்து பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை என அவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் இதனால் பதவி விலகுவது குறித்து தற்போது பசில் ராஜபக்ஷ மீளாய்வு செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## இன்று ஒரு தகவல்

### அரசனின் அரண்மனையில்

அள்ள அள்ளக் குறையாதது அட்சய பாத்திரம். ஆனால் போடப் போடக் குறையாத பாத்திரம் உண்டு: அது என்ன தெரியுமா?.

அதுதான் 'பேராசை' என்ற பாத்திரம் அதை நிறைவு செய்யவே முடியாது.

பேராசையைப் பற்றி சூஃபி இலக்கியத்தில் பிரபலமான ஒரு கதை உண்டு.

ஒரு மன்னர் நகர்வலம் வந்து கொண்டிருந்தார். அப்போது அவர் எதிரில் பிச்சைக்காரன் ஒருவன் வந்து பிச்சை போடுங்கள் என்றான்.

'என் அமைதியைக் கெடுக்காதே .... போய்விடு' என்றார் மன்னர்.

அவன் சிரித்தான். 'அரசே உங்கள் அமைதி கெடக் கூடிய நிலையிலிருந்தால் அதற்குப் பெயர் அமைதியே கிடையாது' என்றான்.

அப்போது தான் மன்னர் 'எதிரில் நிற்பது வெறும் பிச்சைக்காரன் இல்லை யோகி' என்பதைப் புரிந்து கொண்டார்.

அது புரிந்ததும் மன்னர் 'துறவியே உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் கேளுங்கள் கொடுக்கிறேன்' என்றார்.

அந்தத் துறவி மறுபடியும் சிரித்தார்.

'அரசே! உங்களால் முடியாததை எல்லாம் கொடுக்க முடியும் என்று சத்தியம் செய்யாதீர்கள்' என்றார்.

அதைக் கேட்டதும் மன்னருக்குக் கோபம் வந்து விட்டது. 'இவர் என்ன இப்படிச் சொல்கிறார்' என்று நினைத்தார்.

நகர் வலத்தைப் பாதியிலேயே நிறுத்திவிட்டுத் துறவியிடம் 'என்னுடன் அரண்மனைக்கு வாருங்கள்' என்றார். துறவியை அழைத்துக் கொண்டு மன்னர் அரண்மனைக்கு வந்தார்.

துறவி தன்னிடமிருந்த பிச்சைப் பாத்திரத்தை நீட்டினார். 'இது நிறைய எனக்குப் பொற்காசுகள் வேண்டும்' என்றார்.

'பூ! இவ்வளவு தானா?' என்று சொல்லிக் கையைத் தட்டினார் மன்னர்.

ஒரு பெரிய தாம்பாழம் நிறைய பொற்காசுகளை கொண்டு வந்து வைத்தான் ஒருவன்.

அரசர் பொற்காசுகளை அள்ளிப் பிச்சைப் பாத்திரத்தில் போட்டார். பொற்காசுகளைப் போடப் போட அந்தப் பிச்சைப் பாத்திரம் உள் வாங்கிக் கொண்டே இருந்தது.

மீண்டும் மீண்டும் தாம்பாழங்களில் பொற்காசுகளை கொண்டு வந்து கொடுத்துக் கொண்டே இருந்தார்கள்.

மூட்டை மூட்டையாக பொற்காசுகளைக் கொட்டியாயிற்று. அவற்றையெல்லாம் அந்தப் பிச்சைப் பாத்திரம் முழுங்கிக் கொண்டே இருந்தது கடைசி வரையில் அந்தப் பாத்திரம் நிரம்பவேயில்லை.

அதனால் இப்போது அரசிரிடமிருந்த கர்வம் போய்விட்டது. அவர் 'அப்படியே பொத்'தென்று துறவியின் காலில் விழுந்தார்.

அப்போது அந்தத்துறவி 'மன்னா! இந்தப் பிச்சை பாத்திரத்தை உங்களால் மட்டுமல்ல... வேறு யாராலும் நிரப்ப முடியாது. அதற்கு என்ன காரணம் என்றால்... இது சாதாரண பிச்சைப் பாத்திரம் அல்ல... பேராசைகளுடன் வாழ்ந்து இறந்து போன ஒரு மனிதனின் மண்டையோடு இது' என்றார்.

இதுதான் அந்த சூஃபி இலக்கியக்கதை.

இறந்த பின்பும் கூட நிறைவு இல்லையென்றால் அது எப்படிப்பட்ட பேராசையாக இருக்கும் என்று நீங்களே யோசித்துப் பாருங்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## முன்னுரிமை அடிப்படையில் வடக்கு, கிழக்கு மாகாண

## பல்கலைக்கழகங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

### பல்கலை. மானிய ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பல்கலைக்கழகங்களும், பல்கலைக்கழக வளாகங்களும் முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் எஸ்.வி.டி.ஜி. சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

வவுனியா றோயல் காடன் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2009 ஆம் ஆண்டுக்கான யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் வருடாந்த ஆய்வு அமர்வின் ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

பல்கலைக்கழகங்களுக்குத் தேவையான நிதியை அரசாங்கம் ஒப்பீட்டளவில் முழுமையாகத் தந்து உதவுகின்றது. ஆனால் அவற்றுக்குத் தேவையான முதலீட்டு நிதியினைப் பெறுவதில் கால தாமதமும் சிக்கல்களும் ஏற்படுகின்றன. இதற்கு நாட்டின் பொதுவான நிதி நிலைமையே காரணமாகும்.

இருப்பினும் சிரமங்களுக்கு மத்தியில் பல்கலைக்கழகங்களின் மேம்பாட்டுக்கான நிதியை எம்மாலியன்ற வகையில் நாங்கள் வழங்கி வருகின்றோம்.

பல்கலைக்கழகங்களுக்குத் தேவையான அனைத்து முதலீட்டு நிதியையும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் இருந்து எதிர் பார்க்கக்கூடாது.

முழு அளவிலான நிதியை இவ்வாறு வழங்கும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இல்லை.

எம்மைப் பொறுத்தவரையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பல்கலைக்கழகங்களையும், வளாகங்களையும் நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளவற்றைப் போன்றே நாங்கள் கருதுகின்றோம். ஏனைய பல்கலைக்கழகங்கள், வளாகங்களைப் போல இவையும் முன்னேற வேண்டும்.

அபிவிருத்தியடைய வேண்டும் என்பதில் நாங்கள் மிகுந்த ஆர்வமாக இருக்கின்றோம்.

அடுத்த வருடம் பல்கலைக்கழகங்களுக்கான திட்டத்திற்கு உலக வங்கி நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

இந்த நிதியுதவியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல்கலைக்கழகங்கள், வளாகங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்வதென அனைத்துத் தரப்பினராலும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

Z புள்ளி அடிப்படையில் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுகின்றார்கள். இந்தத் தெரிவில் மாணவர்களின் தனிப்பட்ட நிலைமைகள் கருத்திற் கொள்ளப்படுவதில்லை.

ஆகவே பல்கலைக்கழக மாணவர்களைத் தரமுள்ளவர்களாக தகுதியானவர்களாக சமூகத்திற்கு வெளிக் கொணர வேண்டும் என்பதற்காகவே பல்கலைக்கழகங்கள் செயற்பட்டு வருகின்றன.

எனவே, நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள், வளாகங்களையும் சமமான முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதே எமது நோக்கமாகும் என்றார். (ஓ-6)

## 2010 ஆம் ஆண்டிற்கான பாடசாலை தவணை அட்டவணை

(கொழும்பு)

2010 ஆம் ஆண்டின் பாடசாலை கல்வி நடவடிக்கைகளுக்கான தவணை அட்டவணை கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகளின் முதலாம் தவணை 2010 ஜனவரி மாதம் 4 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி வரையும் இரண்டாம் தவணைக் காலம் ஏப்ரல் 22 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி வரையும் 3ஆம் தவணை பாடசாலைக் கல்வி நடவடிக்கைக் காலம் செப்டெம்பர் 7 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சகல முஸ்லிம் பாடசாலைகளும் 2010 ஆம் ஆண்டின் முதலாம் தவணை பாடசாலை நடவடிக்கைகளுக்காக ஜனவரி 4 ஆம் திகதி திறக்கப்பட்டு ஏப்ரல் 9 ஆம் திகதி மூடப்படும்.

முஸ்லிம் பாடசாலைகளின் இரண்டாம் தவணைக் காலம் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பித்து ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி முடிவடைவதுடன் மூன்றாம் தவணையானது செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி ஆரம்பித்து டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி முடிவடையுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அடுத்த ஆண்டில் 210 நாட்கள் பாடசாலை நாட்களாக அமையுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான அமைச்சின் சுற்று நிருபம் சகல மாகாண, வலய கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அரச, அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ-6)

## இராசி பலன்

*20.10.2009*
*(ஐப்பசி 03 செவ்வாய்க்கிழமை)*
*துதியை முற்பகல் 10.47 மணிவரை*
*விசாகம் முன்னிரவு 11.14 மணிவரை*
*இராகுகாலம் 3.02-4.32 மணிவரை*
*சுபநேரம் 10.32-12.02 மணிவரை*
*உலக விவசாயிகள் தினம்*

| | |
|---|---|
| மேடம் | மனோதைரியம், கீர்த்தி, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| இடபம் | செய்தொழில் முன்னேற்றம், பகைவர் உறவு, போசன நன்மை, முயற்சி கைகூடும். |
| மிதுனம் | சிறுவியாதி, தாழ்ந்த சுபாவம், காரிய தாமதம், பணவிரயம். |
| கடகம் | மனச்சஞ்சலம், சுபசெலவு, நல்ல செய்தி, அதிக பிரயாசை. |
| சிங்கம் | மனோதைரியம், ஜனவசியம், எடுத்த கருமங்கள் கைகூடும், உறவினர் வருகை. |
| கன்னி | போசன சுகக்குறைவு, விவாதம், முயற்சி தாமதம், கௌரவக் குறைவு. |
| துலாம் | வெகுமானம், விருந்துபசாரம், மாதர் நட்பு, புதிய முயற்சி. |
| விருச்சிகம் | சோம்பல் நிலை, குடும்பக் கவலை, பிறருக்கு உதவுதல், திடீர் பயணம். |
| தனுசு | நண்பர்கள் வருகை, தனதானிய சேர்க்கை, குடும்ப சுகம், முயற்சி கைகூடும். |
| மகரம் | தொழில் விருத்தி, பெரியோரால் மதிக்கப்படுதல், ஆரோக்கியம், போசன சுகம். |
| கும்பம் | எதிர்பாராத செலவு, வேலைச் சுமை, ஆரோக்கிய குறைவு, பயணம். |
| மீனம் | மனக்கவலை, வாகன பயம், முயற்சி தாமதம், போசன சுகம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 110 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 110 | 120 | 120 |
| தக்காளி | 90 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 80 | 90 | 120 |
| கரட் | 80 | 90 | 100 |
| பூசணி | 30 | 40 | 50 |
| புடோல் | 60 | 70 | 60 |
| வாழைக்காய் | 30 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 45 | 50 | 60 |
| பாகற்காய் | 120 | 130 | 140 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 80 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 60 |
| பயிற்றங்காய் | 120 | 130 | 140 |
| லீக்ஸ் | 100 | 120 | 160 |
| பீற்றூட் | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | 70 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 160 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | 300 | 320 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 30 | 40 |

# ஐப்பசி மாதப் பலன்கள்

## மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை, முதலாம் பாதம் வரை)

பழகுபவர்களிடம் பாசத்தை அதிகம் காட்டும் மேட ராசி நேயர்களே!

ஐப்பசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது வாழ்க்கைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகி வளர்ச்சியைக் கூட்டும் விதத்திலேயே கிரகங்களின் சஞ்சார நிலைகள் இருக்கின்றன. குறிப்பாக ராசி நாதன் செவ்வாய் நீச்சம் பெற்று நீச்சன் நின்ற ராசிநாதன் சந்திரன், உச்சம் பெற்ற புதனோடு கூடி நீச்ச பங்க ராஜயோகத்தை உருவாக்குகிறார். எனவே, இழந்தவைகளை எல்லாம் ஈடுசெய்யும் விதத்தில் தொழில் முன்னேற்றம் உருவாகப் போகிறது.

பொருளாதார முன்னேற்றம் கூடுவதோடு வங்கிச் சேமிப்பும் உயரும். இம்மாதத்தில் வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். குருவும் நீச்சமாகி, செவ்வாயும் நீச்சமாகி ஒன்றையொன்று பார்ப்பது மிகவும் சிறப்பானதாகும்.

''நீச்சனை நீச்சன் பார்த்தால் நினைத்ததை முடிப்பார்'' என்பது பழமொழி. எனவே இரண்டு நீச்ச கிரகங்கள் பார்த்துக் கொள்வதால் அற்புத பலன்களை நீங்கள் காணப் போகிறீர்கள். ஒப்பற்ற வாழ்க்கைக்கு உத்தரவாதம் கொடுக்கும் விதத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறப் போகின்றன.

சென்ற மாதத்தில் வந்த சனியின் மாற்றம் இதுவரை இருந்த தடைகளை அகற்றி தகுந்த நற்பலன்களை வழங்கி இருக்கலாம். இந்த மாதத்தில் ராகு கேதுகளும் பெயர்ச்சியாகி உங்கள் ஆசைகளைப் பூர்த்தி செய்யப் போகிறது. பொதுவாக பாம்பு கிரகங்களால் பலன் கிடைக்க வேண்டுமானால் யோக பலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திகளை முறையாக ஸ்தலங்களுக்குச் சென்று செய்து வர வேண்டும்.

ஒக்டோபர் 21 ஆம் திகதி துலாம் ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதுவரை உச்சம் பெற்ற புதன் இப்பொழுது சூரியனுடன் கூடி புத – ஆதித்ய யோகத்தை உருவாக்கப் போகிறது. இதன் விளைவாக, கல்வி வளர்ச்சி, மாமன் வழி ஒத்துழைப்பு, ராஜ மரியாதை புதிய பதவிகள் கிட்டும்.

ஒக்டோபர் 27 ஆம் திகதி மாபெரும் கிரகமாக விளங்கும் ராகுவும், கேதுவும் தனது பின்நோக்கிச் செல்லும் பயணத்தில் தனுசையும், மிதுனத்தையும் பிடிக்கப் போகிறார்கள். தனுசில் சஞ்சரிக்கும் ராகுவால் பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பப் போகிறது.

பயணங்களாலும் பலன் கிடைக்கப் போகிறது. பூர்வீக சொத்துப் பிரச்சினைகளுக்கு புதிய முடிவு ஏற்படும். மிதுன கேதுவால் உடன் பிறப்புக்களின் உரசல்கள் மாறி உற்சாகத்தோடு இணைந்து செயல்படப் போகிறார்கள். நீண்ட நாட்களாக நடைபெற்ற வழக்கில் வெற்றி கிட்டும். திசை மாறிய துர்க்கை வழிபாடு திருப்பங்களைக் கொடுக்கும். விநாயகர் வழிபாட்டையும், இக்காலத்தில் நீங்கள் மேற்கொள்வது நல்லது.

நவம்பர் 4 ஆம் திகதி துலாம் ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். அங்கிருக்கும் சூரியன் புதனோடு இணைந்து புத- சுக்ர யோகத்தை உருவாக்குகிறார். பிறகு நவம்பர் 7 ஆம் திகதி விருச்சிகத்திற்கு புதன் செல்ல இருக்கிறார்.

இந்த மூன்று நாட்களுக்கிடையில் முக்கிய சம்பவங்கள் ஏராளம் நடைபெறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். இல்லம் தேடி சுபச் செய்திகள் வந்து சேரும். விருச்சிக புதனின் சஞ்சாரத்தால் வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள், உத்யோகத்தில் உயர்வு, அரசு வழி சலுகைகள் கிடைப்பதற்கான அறிகுறி தோன்றும். கடன் சுமை குறையும். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும்.

இம்மாதம் இனிய மாதமாக அமைய ராகு, கேதுக்களை முறையாக வழிபட்டு வருவது நல்லது. லட்சுமி கணபதி வழிபாடு உங்கள் இலட்சியங்களை நிறைவேற்றும்.

## இடபம்

(கார்த்திகை 2,3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள் வரை)

துணிவும், தன்னம்பிக்கையும் கொண்டு தொட்ட காரியங்களை முடித்துக் காட்டும் இடப ராசி நேயர்களே!

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசிநாதன் சுக்ரன் பஞ்சம ஸ்தானத்தில் கூட்டுக்கிரக யோகம் பெற்றுச் சஞ்சரிப்பதால், கூட்டாளிகளினால் லாபமும், கொடுக்கல், வாங்கல்களினால் யோகமும் ஏற்படும். ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு அதிகம் இருப்பதால், எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை. குறிப்பாக விரயாதிபதியும் அஷ்டமாதிபதியும் நீச்சம் பெற்று சஞ்சரிப்பதால் செலவிற்கேற்ற வரவு வந்து கொண்டேயிருக்கும்.

சென்ற மாதத்தில் நடைபெறாத காரியங்கள் இம்மாதத்தில் நடைபெறும். சேமிப்புகள் உயரும். புதிய பொறுப்புகளும், பதவிகளும் ஒரு சிலருக்கு வந்து சேரலாம். வழக்குகளில் எதிர்பாராத திசை, திருப்பங்கள் ஏற்படும். ராகு- கேதுக்களும் இம்மாதத்தில் பெயர்ச்சியாகப் போகின்றன.

அஷ்டமத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது சிலருக்கு இடமாற்றங்கள், ஊர் மாற்றங்கள், வீடு மாற்றங்கள் உருவாகலாம். இரண்டாம் இடத்து கேதுவால் குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும், கடுமையாக முயற்சித்தும் சில காரியங்கள் கைமாறிப் போகாமல் இருக்க கடவுள் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

குறிப்பாக, சென்ற மாதத்தில் சனி விலகியதால் சிறப்பான பலன்கள் தான் உங்களுக்கு வந்து சேரும். இடையில் பெயர்ச்சியாகும் இந்தப் பாம்புக் கிரகத்தால் நற்பலன்கள் வந்து சேர சர்ப்ப சாந்திகளை நீங்கள் செய்து கொள்ளலாம்.

கோதண்ட ராகு அள்ளிக் கொடுக்கும் வல்லமை பெற்றவர். எனவே நல்ல விதத்தில் அவர் தரும் பொருட்களைச் சுப விரயமாக்கிக் கொள்வது நல்லது. மங்கல ஓசை குடும்பத்தில் கேட்கும் வாய்ப்புகளை கோதாண்ட ராகு உருவாக்கும்.

அக்டோபர் 21 ஆம் திகதி துலாம் ராசியில் புதன் சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக எதிரிகளின் பலம் குறையும். எடுத்த காரியத்தில் வெற்றி கிட்டும். உதிரி வருமாணங்கள் பெருகும். உள்ளம் மகிழும் சம்பவம் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர்.

அக்டோபர் 27 ஆம் திகதி தனுசு ராசியில் ராகுவும், மிதுன ராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். குடும்ப ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் குடும்பச் செலவுகள் கூடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டுமானால் எதையும் ஒரு கணம் யோசித்துச் சொல்வது நல்லது. பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள்.

### சிவல்புரி சிங்காரம்

ராகு பலத்தால் உத்தியோகத்தில் ஊர் மாற்றங்கள், இலாகா மாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரலாம். தெசாபுத்தி பலம் பெற்றவர்களுக்கு கேட்கும் இடத்திற்கு மாறுதல் கிடைக்கும். மருத்துவச் செலவுகள் கூடும் என்பதால் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துவது நல்லது. நந்தீஸ்வரர் வழிபாட்டில் கவனம் செலுத்துங்கள். அனுகூல ஸ்தலத்தில் ராகு- கேதுக்களுக்குரிய பரிகாரங்களை செய்தால் அதிர்ஷ்ட வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ளலாம்.

நவம்பர் 4 ஆம் திகதி துலாம் ராசியில் சுக்ரனும், 7 ஆம் திகதி விருச்சிக ராசியில் புதனும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இதன் விளைவாக விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வாகன யோகம் உண்டு. பாக்கிகள் வசூலாகும்.

எல்லாநாட்களும் இனியநாட்களாக அமைய பிள்ளையார் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். வடக்குப் பார்த்த பிள்ளையார் உங்கள் வளர்ச்சிக்கு வழிகாட்டுவார்.

(தொடரும்)

# யுத்த வெற்றியை பறைசாற்றும் வகையில் நாடெங்கிலும் பௌத்த தூபிகள்

(கொழும்பு)

யுத்த வெற்றியை பறைசாற்றும் வகையில் நாட்டின் சகல மாகாணங்களிலும் பௌத்த தூபிகள் அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசாங்கப் படையினர் ஈட்டிய யுத்த வெற்றியை உலகிற்கு எடுத்து உணர்த்தும் வகையில் இந்த பௌத்த தூபிகள் ஒன்பது மாகாணங்களிலும் நிறுவப்படவுள்ளது.

இதன் முதல் கட்டமாக அனுராதபுரத்தில் நேற்றைய தினம் பௌத்த தூபி ஒன்றுக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நடைபெற்றது. (ஓ-6)



கோப்பாய் லயன்ஸ் கழகமும் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை விரிவுரையாளர்களும் முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் அறக்கொடை நிதியமும் இணைந்து நடத்திய கோப்பாய் மகாவித்தியாலய மாணவர்களுக்கான சிறுவர் மகிழ்வரங்கில் வைத்திய கலாநிதி லயன். வை. தியாகராஜா மங்கள விளக்கேற்றுவதையும் முன்னாள் கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் எஸ். சற்குணநாதன் வித்தியாலய மாணவி ஒருவருக்கு அன்பளிப்பு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியோர் 6 ஆம் தர அனுமதிக்கு கல்வியமைச்சின் விண்ணப்பப்படிவத்தையே பயன்படுத்தவும்

(கொழும்பு)

5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து 6 ஆம் தரத்தில் பிரபல பாடசாலைகளில் நுழைவதற்கு விண்ணப்பிக்க கல்வி அமைச்சினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தை மாத்திரம் பயன்படுத்துமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

### அமைச்சின் அதிகாரி அறிவிப்பு

இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் சித்தியடைந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கவும் பிரபல பாடசாலைகளில் 6 ஆம் தரத்தில் சேர்த்துக் கொள்வதற்குமான விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி வலயக் கல்விப் பணிப்பாளர்களினூடாக அதிபர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இவ் விண்ணப்பப் படிவங்கள் பூரணப் படுத்தப்பட்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக அதிபர்களினால் வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். இவ்வாறு ஒப்படைக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் யாவும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக வலயக் கல்வி பணிப்பாளர்களினால் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

அத்துடன் இது தொடர்பான கூட்டமொன்று இம்மாதம் 27 ஆம் திகதி கல்வி அமைச்சில் இடம்பெறும். இதில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொள்வர்.

இதேவேளை, ஒருசில தனியார் புத்தக நிலையங்களில் இவ்விண்ணப்பப்படிவம் விற்பனை செய்யப்படுவதாகவும் இவற்றை வாங்கி மாணவர்கள் பூரணப்படுத்துவதாகவும் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இத்தகைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)



வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட வட மாகாண தமிழ் இலக்கிய விழாவில் 2008ஆம் ஆண்டிற்கான ஆளுநர் விருது வழங்கும் நிகழ்வில் கலை இலக்கியத் துறைக்கான விருதை கந்தையா நடேசுவும் (தெணியான்), சிறுவர் இலக்கியத்துறைக்கான விருதை பி.பி.அந்தோணிப்பிள்ளையும்,இசை நாடகத்துறைக்கான விருதை முத்தர் நடராசாவும் (பாகவதர்) பெற்றுக்கொள்வதை படங்களில் காணலாம்.

### தமிழக எம்.பிக்களைக் கொண்டு

# முகாம்களின் புகழ்பாடி உலகுக்கு காட்டுவதற்கு அரசு மேற்கொண்ட முயற்சி தோல்வி

(கொழும்பு)

அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக 2 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான அப்பாவிமக்களை அரசாங்கம் சிறைப்படுத்தியுள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் தமது சுயவிருப்பத்துடனேயே அகதி முகாம்களில் தங்கியிருக்கின்றனர் என்பதை அரசாங்கத்தால் உறுதிப்படுத்த முடியுமா? என்று இடம்பெயர் முகாம் மக்களின் நலன் பேணும் மத்திய நிலையம் கேள்வியெழுப்பியுள்ளது.

தமிழகப் பாராளுமன்ற உறுப்பினர்களை அகதிமுகாம்களுக்கு செல்ல அனுமதித்ததன் மூலம் தனது அடிமைத்தனத்தை அரசாங்கம் வெளிக்காட்டியது மட்டும் அல்லாமல் நாட்டின் தன்னாதிக்கத்தையும் இலங்கை அரசு கேவலப்படுத்தியுள்ளது எனவும் அந்த நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இடம்பெயர் முகாம் மக்களின் நலன் பேணும் மத்திய நிலையம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அகதிமுகாம்களில் வாழும் மக்களின் நிலைமைகளை கண்டறிவதற்காக தமிழக எம்.பிக்கள் 10 பேர் கடந்த வாரம் இலங்கைக்கு வந்திருந்தனர். முகாம் விஜயம் கசப்பான அனுபவம் என்றே தமிழக எம்.பிக்கள் குழு தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால் அரச ஊடகங்கள் முகாம்களின் நிலைமை திருப்தியளிப்பதாக தமிழக எம்.பிக்கள் கருத்துத் தெரிவித்ததாகவே செய்திகளை வெளியிட்டன. இந்நிலையில் முகாம்களிலுள்ள உல்லாச வசதிகளையும் மக்களின் சுகபோக வாழ்க்கையைப் பற்றியும் வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு காட்டமுயற்சித்து இலங்கை அரசாங்கம் சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளது.வெளிநாடுகளின் சதி தொடர்பில் இரவு பகலாக உளறிக் கொட்டும் அரசாங்கம் இடம்பெயர் மீக்களின் பிரச்சினையை காரணம் காட்டி வெளிநாட்டுத் தலையீட்டுக்கு இடமளிப்பது கவலைக்குரிய விடயமாகும்.

தமிழக எம்.பிக்களின் விஜயத்தை ஏற்பாடு செய்து அவர்களைக் கொண்டு முகாம்களின் சிறப்பை புகழ்பாடி அதனை உலகுக்கு காட்ட அரசாங்கம் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்துள்ளது.முகாம்களில் உள்ள 58 ஆயிரம்பேரை இருவாரங்களில் குடியமர்த்துவதாக அரசாங்கம் கூறியது உண்மை என்றால் இதுவரை காலமும் மிதிவெடிகளை காரணம் காட்டியது பொய்தானா?

தன்மீது அழுத்தங்கள கொடுக்கப்படும் போது இடம்பெயர்ந்த மக்கள் விடயத்தில் தான் சிறப்பாக செயல்படுவதைக் காட்டிக் கொள்ள அரசாங்கம் அம்மக்களை பணயக் கைதிகளாக பயன்படுத்துவதை காணமுடிகின்றது. (ஓ-6)

### மஹிந்த ராஜபக்ஷவை அழிக்க சில சக்திகள் முயற்சி

## அமைச்சர் ஜகத் புஷ்பகுமார

(கொழும்பு)

யுத்த வெற்றியின் கௌரவத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்க மறுக்கும் சில சக்திகள் அவரை அழிக்க முயற்சிப்பதாக அமைச்சர் ஜகத் புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள தலைவர்களில் பெறமுடியாத யுத்த வெற்றியை தற்போதைய ஜனாதிபதி பெற்றுக்கொண்டுள்ளார்.

இதன்காரணமாகவே அவரை இந்த சக்திகள் அழிக்க முற்படுகின்றன.

யுத்த வெற்றியின் காரணமாக நாட்டிலுள்ள சகல இனங்களும் அச்சமின்றி வாழக்கூடிய சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும் ஜகத் புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

பதுளையில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# கலைத்திட்டத்தில் நாட்டுப்புறவியலை ஒரு பாடமாக்குவோம்

04



மன்னர்களுக்கென்று தனி இடத்தில் நடித்துக் காட்டப் பெறும் கூத்துக்களை வேத்தியல் என்றும் அவை தரத்தில் உயர்ந்ததாகவும் சிறப் புடையதாகவும் இருக்குமென்றும் மக்களுக்காகப் பொது இடங்களில் நடித்துக் காட்டப்பெறும் கூத்துக்களைப் பொதுவியல் என்றும் கூறினர்.

தமிழகக் கூத்துக் கலைஞர்கள் பல்வேறு நாடுகளுக்கும் சென்று ஆங்காங்குள்ள பேரரசர்கள், சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் அவை முன்பு ஆடியும் பாடியும் நடித்தும் தங்களின் கலைத்திறத்தால் சன்மானம் பெற்றுள்ளனர்.

இக்கலைஞர்களின் திறமையைப் புகழ்ந்து பல அரசர்கள் மானியங்களாகச் சிற்றூர்களை யும் நிலங்களையும் பல்வேறு பரிசுப் பொருட் களையும் வளங்கிச் சிறப்பித்துள்ளனர்.

இவ்வாறான சன்மானத்தையும் மதிப்பையும் பெற்ற கலைஞர்கள் தமது வாழ்வை நலம்படுத்தி ஒழுக்கசீலர்களாக வாழ்ந்து காட்டவேண்டியவர்கள் ஆயினர். ஆனால் அவர்கள் நெறி தவறியதினால் கூத்துக் கலைக்கு இழுக்கு ஏற்பட்டது.

செல்லும்இடங்களிலெல்லாம் இக் கலைஞர்களுக்கு மன்னர்களாலும் மக்களாலும் வழங்கப்பட்ட அளவற்ற செல்வங்கள் இவர்களை ஆடம்பரப் பிரியர்களாகவும், நெறியற்ற வர்களாகவும், கட்டுப்பாடும் ஒழுக்கமும் இல்லாதவர்களாகவும், வாழச் செய்தன. இவ்வாறான கலைஞர்களின் வரலாற்றினால் பிற்காலத்தில் கூத்துக் கலையை இளிவாக நோக்கும் பாங்கு ஏற்பட்டது. இது நிரந்தரமானது அல்ல. சமுதாயம் வளர்ச்சி அடைந்து, கல்வி அறிவு பெருகி, சமத்துவம், சகோதரத்துவம், மனிதநேயம் என்பவற்றுக்கு உட்பட்டு பிற்காலத்தின் ஒழுக்கசீலராக வாழக் கற்றுக்கொண்டனர்.

இருபாலாரும் இணைந்த வகுப்பறைக் கல்வியும், பல்கலைக்கழகக் கல்வியும், ஒருவரை ஒருவர் புரிந்து பழகக் கூடிய மனப்பக்குவத்தைக் கொடுத்துள்ளது. எனவே இந்த சமுதாய அமைப்பிலே கலையிலே ஈடுபடுபவர்கள் கலைமூலம் சிறப்படைய வாய்ப்புண்டு.

இலங்கையைப் பொறுத்தவரை இற்றைவரை கூத்துக்கலையானது பெரும்பான்மையாகப் பாமர மக்களிடமே உள்ளது. இதனால் படித்தவர்கள், இதனைப் பாமர மக்களின் கலையாக எண்ணி அக் கலையைப் பயிலப் பின்னிற்கின்றனர்.பாமர மக்களின் கலையென நோக்கும் இக் கலையை பல்கலைக்கழகக் கலையாக அங்கீகரிக்கும் போது அதன் மேன்மை விளங்க, அதை மாணவர்கள் கற்க முன்வருவார்கள் என்பது எமது கருத்தாகும்.

இலங்கையின் தமிழ்ப் பிரதேசத்திலுள்ள கூத்துக்களை வடமோடி, தென்மோடி, வடபாங்கு, தென்பாங்கு (மன்னார்) கரையோரப் பாங்கு, முல்லைப்பாங்கு என வகைப்படுத்தியுள்ளனர்.இவற்றுக்கு மரபுரீதியான பல வடிவங்களில் ஆக்கத்திலும், பாட்டிலிரும் தனித்துவம் உள்ளன.

இத்துறை சார்ந்த பேராசிரியர்கள், பலர், மக்கள் விருப்பத்திற்கேற்ப ஜனரஞ்சகமாக்க விரும்பும் கூத்து, நடனமுறைகளுக்குள் நாட்டிய நடனவகைகளையும் புகுத்தி மக்களிடம் வரவேற்பைப் பெற முயல்கின்றனர். இதற்கு அண்ணாவிமார்களும் உடந்தையாகவுள்ளனர்.

இந்நிகழ்வானது மரபுவழிக் கூத்தினை அழிக்கும் முயற்சியாகும் என்பது என் போன்ற கூத்துக்களை சார்ந்தோரின் கருத்தாகும்.

### தெருக்கூத்து

தமிழ் நாடக வரலாற்று நூலில் கிராமிய தெருக்கூத்துப் பற்றி, கலைஞர் கு.சா. கிருஷ்ணமூர்த்தி தனது அனுபவத்தை இவ்வாறு தெரிவிக்கின்றார்.

"கிராமங்களில் கோயில் திடல்களிலும், களத்து மேடுகளிலும், தெருக்களிலும் மேடைக்கு மட்டும் கீர்த்துக் கொட்டகை அமைத்துத் திறந்த வெளியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு கண்டுகளிக்கும் வண்ணம் தீவெட்டிப் பந்தங்களைப் பிடித்தும் பிறகு காடா விளக்குகளை வைத்துக்கொண்டும் அதற்கு அடுத்த நிலையில் கியாஸ் (Gas) லைட்டுக்களை வைத்துக்கொண்டும், வெறும் வெள்ளைத் திரையை இரண்டு பேர் பிடித்துக் கொள்ள அதற்குப் பின்னே மறைந்து நின்று அரிதாரப்பூச்சுடனும், அட்டைக் கிரீடத்துடனும், பலவித வண்ண மணிகளை வைத்துத் தைத்த மேல் அங்கி கால் சட்டையுடனும், புஜக்ருதுகளுடனும் சுமார் அரைமணி நேரத்திற்கு மேல் அசுரக் குரலில் அட்டகாசத்துடன் பாடல்களைப் பாட அதைத் தொடர்ந்து மற்றும் ஐந்தாறு நபர்கள் பிற்பாட்டுப் பாட அத்துடன் ஆர்மோனியம், மிருதங்கம், தாளங்கள் எல்லாம் சேர்ந்து போர்க் களப்பறை முழக்கங்கள் போல் கேட்போரின் காதுகள் செவிடுபட உச்சஸ்தாயியில் முழங்கியபின் திரை நீங்கும். அரிச்சந்திரனோ ராமனோ -கிருஷ்ணனோ எந்த வேடதாரியாயினும் காலில் சலங்கைகள் குலுங்க அட்டகாச மாகச் சுழன்று சுழன்று ஆடிக்கொண்டே பாடுவார் கள்.

நடிகன் முன்னும் பின்னும் சுழன்று செல்லும் போதெல்லாம் உடன் சென்று அவன் முகத்திற்கு வெளிச்சம்படும் வண்ணம் தீவட்டியை அல்லது காடா விளக்கைக் காட்டவேண்டும்.

இதில் சிறிது தவறினாலும், மேடையிலேயே ராமனே ரௌடியாகித் தீவட்டிக் காரனை நையப்புடைப்பான்.

வேறு எந்தத் தகுதியும் இல்லாதவர்கள் தான் தீவட்டிப் பிடிக்க வருவார்கள்.

அதனால் தான் இன்றும் திறமையற்றவர்களைத் தீவட்டித் தடியன் என்று இழித்துரைக்கும் வழக்கம் இருக் கின்றது போலும்.

பெரும்பாலும் இவர்கள் நடிக்கும் நாடகம் அரிச்சந்திரா, இராமாயணம், மகாபாரதம் தொடர்ந்து ஐந்து நாட்கள் பகுதி பகுதியாகப் பிரித்து நடித்து கடைசிநாள் பட்டாபிஷேகம் நடைபெறும். (தொடரும்)

கலாபூஷணம்
செ.மெற்றாஸ்மயில்

# இலங்கையில் ஆளுகைப் பொறுப்பில் உள்ளூராட்சி அரசாங்க அமைப்பு

**18.10.2009 உள்ளூராட்சி பற்றிய மாநாட்டில் ஆளுநரின் செயலாளர் திரு. சி.ரங்கராஜா அவர்களினால் ஆற்றப்பட்ட உரையின் சுருக்கம்.**

இந்த கருத்துப் பரிமாற்ற மாநாட்டை ஏன் ஒழுங்கு செய்துள்ளார்கள் என இங்கு ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. கடந்த 30 ஆண்டுகளாக எமது உள்ளூராட்சி நடைமுறை ஒரு தேக்க நிலையில் இருந்தமை எல்லோருக்கும் தெரிந்த விடயமாகும். இக் காலப் பகுதிக்குள் என்ன நடந்தது என்பதை கவனமாக நோக்கினால் இந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

அத்துடன் எம் முன்னே உள்ள மாபெரும் வாய்ப்பு ஒன்றினை கை நழுவ விடுவதா? அதாவது அதனை எப்படிக் கைப்பற்றி அதனது நன்மைகளை எவ்வாறு மக்களிற்கு கொண்டு சேர்ப்பது என்பதையும் தீர்மானித்துக் கொள்ள முடியும். வாய்ப்பு என்று எதனைக் கூறுகிறேன் என்றால் மக்கள் தங்களுடைய உள்ளூர் மட்ட அபிவிருத்தி தேவைகளை தாம் விரும்பிய படி இட்டு நிறைவேற்றுவதற்கு ஆற்றல்களைக்கொண்ட சுயாதீனமான உள்ளூர் மட்ட அரசாங்கங்களைக் அமைத்துக் கொள்வதற்கான வாய்ப்பைப் பற்றிக் கூறுகின்றேன். இது என்ன என்று நீங்கள் ஆச்சரியமாகக் கேட்கலாம். 34 உள்ளூர் மட்ட சுயாதீன அரசாங்கங்களை நாம் வடமாகாணத்தில் அமைத்துக்கொள்ள முடியும். இது எப்படி என்று தெளிவாகக் கூறுகின்றேன்.

நாங்கள் எங்களைச் சுற்றி கடந்த 30 ஆண்டுகளாக ஒரு யுத்த சூழலை ஏற்படுத்தி எமது கவனத்தை வேறு எங்கோ செலுத்தியுள்ளோம். 20ஆம் நூற்றாண்டில் ஏறக்குறைய மூடிய பொருளாதார சூழலில் ஆரம்பித்த இந்த யுத்தம் 21ஆம் நூற்றாண்டில் புதிய வாழ்வியல் கருத்துக்கள் பரிணமித்துள்ள திறந்த பொருளாதாரச் சூழலில் முடிந்துள்ளது.

20ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் ஏற்பட்ட தகவல் தொழில் நுட்ப அறிவியல் புரட்சி மனித வாழ்வில் சகல துறைகளிலும் பெரும் அளவில் தாக்கியுள்ளது. ஆட்சி அல்லது ஆளுகை பற்றிய கருத்துக்களும் கோட்பாடுகளும் கூட பெருமளவில் மாறியுள்ளன. நாம் 30 ஆண்டுகளுக்கு முன்னைய சிந்தனைகளால் சிறைபிடிக்கப் பட்டுள்ளோம். கடந்த நூற்றாண்டின் இறுதி பகுதியில் ஆளுகை பற்றிய கருத்துக்கள் பாரிய அளவில் விரிவடைந்துள்ளதினால் ஆட்சிக் காலப்பொறுப்புக்கள் தனியொரு அமைப்பின் கையில் வழங்கப்படாது ஒன்றுக்கு மேற்பட்ட அமைப்புகளிடம் பகிர்ந்தளிக்கப்படலாம் என்றாகி விட்டது.

இலங்கையில் கூட ஆளுகைப் பொறுப்பு (Governance Responsivility) மூன்று படி நிலை அமைப்புகளிடம் தற்போது வழங்கப்பட்டுள்ளது. முதலாவது படி நிலை அமைப்பு மத்திய அரசாங்கம் ஆகும். இரண்டாவது படி நிலை அமைப்பு மாகாண அரசாங்கம் மூன்றாவது படி நிலை அமைப்பு உள்ளூராட்சி அரசாங்கமும் ஆகும். இந்த மாபெரும் மாறுதல் , அதாவது பண்முகப்படுத்தப்பட்ட ஒரு ஜனநாயக அமைப்பு என்ற முறையில் இருந்து (Democratic Decentralized Structure) சுயாதீனமுள்ள உள்ளூராட்சி அரசாங்கம் என்ற முறைமைக்கு மாறிய இந்த வரலாற்று நிகழ்வு பற்றி (Autonomous Sclf Governments) அதாவது மூன்றாவது படி நிலை ஆளுகை அமைப்பு பற்றிய முக்கியத்துவம் மக்கள் மத்தியில் பேசப் படாமலேயே மறைந்துள்ளது. 1981ஆம் ஆண்டிலேயே மாவட்ட சபைகள் தோற்றம் பெற்று தோல்வி அடைந்ததன் பின்னர் உள்ளூராட்சி முறைமைகள் பற்றியும் உள்ளூராட்சி அமைப்புகள் பற்றியும் விருப்போடு கவனம் செலுத்தாமையே இதற்கான காரணமாகும். இக்கால கட்டத்தில் உலகளாவிய ரீதியில் மக்களுக்கு அண்மையிலேயே தீர்மானம் எடுத்தல் வேண்டும் (Principles of Proximity) எந்த மட்டத்தில் எந்த விடயங்களைச் செய்ய முடியுமோ அந்த மட்டத்தில் அந்த விடயங்களை கையளித்த (Principles of Subsidiarity) சுயாதீனத் தன்மை (Autonomy) ஆகிய கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதேபோன்று ஆளுகை பற்றிய கருத்து மேலும் விரிவடைந்து கல்வி ஆளுகை (Educational Governance) சுகாதார ஆளுகை (Health Governance) பொருளாதார ஆளுகை (Economic Governance ) என விசேடத்துவம் பெற்றுச் சென்றுள்ளனர். ஆளுகைக்கான புதிய பங்காளிகளாக குடியியல் அமைப்புக்கள் (Civil Society) அரச சார்பற்ற அமைப்புகள் (NGO S) தனியார் துறையினர் (Private Sectors) மற்றும் பொதுமக்கள் ஆகியோரும்(நேரடிப்பங்காளர்களாக) ஆகியுள்ளனர்.

இந்த புதிய கருத்தியல் புறவுருவிற்கு ஏற்றதாக எமது உள்ளூராட்சி முறைமையில் பாரிய மறுசீரமைப்பு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

சுயாதீன நிறுவனங்கள் என்றால் என்ன? குறிப்பிட்ட விடயத்தினுள் எவ்வித புறத்தலையீடும் இன்றி முடிவுகளை எடுத்து அமுல் படுத்துகின்ற ஆற்றலும் அந்தஸ்தும் ஒரு நிறுவனத்திற்கு வழங்கப்படுமாயின் அது சுயாதீன நிறுவனமாகும். இது எழுத்தாணையின் கீழன்றி நடைமுறைச் செயற்பாட்டில் அமுலில் இருக்குமானால் (Defacto) அதுவும் சுயாதீனமானதே என்றே கொள்ளல் வேண்டும். இந்த சுயாதீனமான தனித்தியங்கக் கூடிய செயல்முறையை நடைமுறைச் சாத்தியமாக்குவதே இன்று எம்முன்னுள்ள பிரச்சினை.

1987 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆக்கப்பட்ட மிக முன்னேற்றகரமானதொரு உள்ளூராட்சிச் சட்டம் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமாகும். துரதிஷ்டவசமாக அதே ஆண்டு அமுலுக்கு வந்த மாகாண சபைகள் சட்டம் பற்றிய சத்தமிக்க விவாத அலைகளுள் இந்தச் சட்டம் புதைந்து போனதால் அதுபற்றிய கருத்துக்கள் பெரிதாகப் பேசப்படவில்லை. இதேபோல 13ஆவது அரசியலமைப்ப திருத்தத்தின் கீழ் செய்யப்பட்ட மேலும் ஒரு பாரிய மாற்றம் உள்ளூராட்சி அரசாங்கங்கள் 3 ஆம் படி ஆளுகை அமைப்பாக ஏற்றுக்கொள்ளப் பட்டமை ஆகும். இத்திருத்தச் சட்டம் மீது தொடுக்கப்பட்ட விமர்சனங்களால் அதுவும் பெரிதாகப் பேசப்படவில்லை. இந்த 13ஆவது திருத்தத்தின் கீழ் 2 ஏற்பாடுகள் செய்யப்பட்டன. உள்ளூராட்சி விடயம் ஒரு மாகாண சபை விடயமாக முதலாவது பட்டியலில் மாகாண சபைக்குக் கையளிக்கப்பட்டது. ஆனால் உள்ளூராட்சி மன்றங்களின் அமைப்பு உருவாக்கம் ஆகியன மத்திய அரசிடமே தக்க வைக்கப்பட்டன. அதே போன்று இதே அரசியல் திருத்தச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட எந்த அதிகாரத்தையும் குறைக்கமுடியாது என்ற உத்தரவாதமும் அவர்களுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கலாம் என்ற ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. இதன் கருத்து யாதெனில் உள்ளூராட்சி மன்றங்கள் தமக்குரிய அதிகாரங்களுடன் மாகாண சபைக்கு வழங்கப்பட்ட விடயங்களின் கீழும் செயற்பட வாய்ப்பு உண்டு என்பதாகும். இங்கு செய்ய வேண்டியது என்னவென்றால் மாகாண சபையின் அரசியல் தலைமை தமக்கு வழங்கப்பட்ட விடயங்களின் பொருட்டான சட்டங்களை ஆக்கும் பொழுது அவ்விடயங்களின் கீழ் இயன்றளவுக்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கு பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் கையளித்து சட்டங்களை ஆக்கி உள்ளூராட்சி நிறுவனங்களை சுயாதீனமாக செயற்பட வைத்தல் ஆகும்.

இத்தகைய பாரிய மாற்றங்களுக்கென சட்ட ரீதியாக ஏற்பாடு செய்திருந்தும் கூட உள்ளூராட்சித்துறை அது ஒரு ஆளுகைப் பொறுப்பாளி என்ற வகையில்(Asthetier of Goverance) செயற்பட முடியாமல் உள்ளது. இந்நிலையைமையை ஆராய்ந்து உள்ளூர் மட்டத்தில் நல் ஆளுகையை நிறுவுவதற்குத் தேவையான விதப்புரைகளைச் செய்யுமாறு கேட்கப்பட்ட விசாரணை ஆணைக் குழுவானது 1999 இல் மிக முன்னேற்றகரமாக பல விதப்புரைகளை வழங்கியிருந்தது. இந்த விதப்புரைகளில் ஆகக்கூடிய அளவு சுயாதீனத் தன்மை, மக்களுடைய நேரடிப் பங்களிப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளில் உள்ளூராட்சி அரசாங்கங்களிற்கு அதிக பங்கு மக்களுக்கு வகை கூறும் தன்மை ஆகிய இன்னோரன்ன பல விதப்புரைகள் கூறப்பட்டிருந்தன இவற்றினை நடைமுறைப்படுத்துவதற்குதேவையான பல நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. முக்கியமாக உள்ளூராட்சி பற்றிய அரசாங்கத்தின் கொள்ளைக் பிரகடனமானது பல ஊக்கம் தருகின்ற விடயங்களைக் கொண்டுள்ளது. 2007ஆம் ஆண்டு யூலை மாதம் வெளியிடப்பட்ட இக் கொள்கைப் பிரகடனத்தில் பின்வரும் விடயங்களை அமுல் நடத்தி அவற்றினை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் தனது உறுதிப்பாட்டையும் ஈடுபாட்டையும் இக்கொள்கைப் பிரகடனத்திலேயே வெளிப்படுத்தியுள்ளது.

❖ ஆகக் கூடிய அதிகாரப் பரவலாக்கமும், பன்முகப்படுத்தப்படுத்தலும்(Maxim um Devolution and Decentralization)

❖ சுயாதீனத் தன்மை , இயலக்கூடிய மட்டத்தில் ஒப்படைத்தல் , மக்களுக்கு அண்மித்ததான இடத்தில் தீர்மானம் எடுத்தல் ஆகிய கருத்துக்களைப் பேணுதலும் மதித்தலும் (Principles of Autonomy, Subsidiarity and Proximity)

❖ தங்கியிருக்கும் நிறுவனங்கள் என்ற நிலையில் இருந்து சுயமான ஆட்சிப் பங்காளர் என்ற நிலைக்கு மாறுதல்

❖ மத்திய நோக்கி ஈர்ந்து இழுக்கும் துறை சார் கொள்கைகளை இல்லாது செய்தல் .

❖ வேண்டத்தகாத தலையீடுகளில் இருந்து பாதுகாத்தல்.

❖ மாகாண சபைகளில் இருந்து அவர்களின் அதிகாரங்களின் ஒரு பகுதியை உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்குதல்.

❖ மத்திய மாகாண உள்ளூர் அரசாங்கங்களுக்கிடையில் கருத்துப் பரிமாற்றம், ஒருமைப்பாடு, கூட்டுறவு என்பன.

❖ உள்ளூராட்சி சபைகளின் சுயமான பரிமாற்றம்.

❖ நிதி நிர்வாக திட்டமிடல் விடயங்களில் தற்துணிவு அதிகாரம்.

❖ உள்ளூர் சமூக பொருளாதார பௌதீக அபிவிருத்திக்கு உள்ளூராட்சிச்சபைகளே பொறுப்பான மத்திய அதிகாரியாக்குதல்.

❖ பொதுசன வசதிகளை எற்படுத்திக் கொடுக்கும் நிறுவனம் என்ற நிலையிலிருந்து இலக்கு நோக்கிய உள்ளூர் மட்ட அபிவிருத் திகள் மூலம் தேசிய பொருளாதார அபிவிருத் திக்கும் முன்னேற்றத்திற்கும் பங்காளிகளாக் குதல்.

❖ உள்ளூராட்சி நிர்வாக முறைமையை மீளமைத்து பலப்படுத்தல்.

❖ வட்டார ஆட்சி பிரதிநித்துவத்தை மீள அறிமுகம் செய்தல்.

❖ பல திட்டங்களை உருவாக்கும் முறையில் இருந்து ஒருங்கிணைக்கப்பட்ட பல மட்டங்களில் திட்டங்களை உருவாக்கும் முறைக்கு மாறுதல்.

❖ உள்ளூராட்சி சபைகளின் கீழ் சகல அபிவிருத்திப் பணிகளையும் ஒன்றிணைத்தல்.

❖ உள்ளூராட்சி சபைகளுக்கு அப் பிரதேசத்திற்கான திட்டமிடல் அதிகாரி என்ற அந்தஸ்தினைக் கொடுத்தல்.

❖ இச்சபைகளை சுயாதீனமான மக்களுக்கு வகை கூறும் நிறுவனங்களாக மாற்றுதல்.

❖ உள்ளூர் அரசாங்கங்களுடன் சகல அபிவிருத்தி முதலீடுகளையும் இணைத்தல்

❖ உள்ளூராட்சி சபைகள் அபிவிருத்தித் திட்டங்களை அனுமதிப்பவர், வசதி செய்பவர், இணைப்பவர், கண்காணிப்பவர் என்ற வகிபாகத்தை அடைதல் .

❖ பேண்தகு பங்கேற்பு நடைமுறையிலான திட்டமிடல்.

❖ முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்ட உள்ளூர் அரசியல் கலாசாரம்.

❖ சட்ட அமுலாக்கல் நிறுவனங்களுடன் பங்குதாரர் ஆகுதல்.

❖ சமூக வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட முறையில் சமத்துவமான சட்ட ஆட்சியை அமுல்படுத்தல்.

❖ அதியுச்ச வெளிப்பாட்டுத்தன்மையும் வகை கூறும் முறைமையும்.

❖ மக்களின் தகவலுக்கான உரிமையினை பாதுகாத்தலும் பேணுதலும் (வருமானம், செலவு, கேள்வி நடைமுறை , நியமனங்கள், திட்ட முன்னுரிமைகள் போன்றவற்றில்)

❖ பொது நிதியினை சமத்துவமாகப் பங்கிடுதல்.

❖ நலிவுற்றோர் , பெண்கள், குழந்தைகள் போன்றோரின் தேவைகளுக்கு முன்னுரிமை.

❖ உள்ளூர் அரசாங்க முறைமையில் மக்களின் நம்பிக்கைகையை வளர்த்தல்.

❖ நிதி மற்றும் ஏனைய மூல வளங்களைப் பெற்றுக்கொடுத்தல்.

❖ சொத்துவரியில் சுயமதிப்பீட்டு முறையினை ஊக்குவித்தல்.



❖ உள்ளூராட்சி நிறுவனங்களை அபிவிருத்திக்கான நிறுவனங்களாக மாற்றுதல்

❖ தனியார்துறை முறைசாரா சந்தைகள் ஆகியவற்றையும் கூட உள்ளடக்கும் வகையில் ஒழுங்குபடுத்தும் முறைகளை விரிவாக்கல்.

❖ மத்திய, மாகாண அரசாங்கங்களின் அனுமதியில் தங்கியிருத்தலைக் குறைத்தல்

❖ மனித, நிதி வழங்களுக்காக சுதந்திரமான அணுகும் ஆற்றலை வளர்த்தல்.

❖ உள்ளூராட்சி நிறுவனங்களின் மனித வளத்தினை கண்ணிய உயர் தொழில்சார் மனித வளமாக மாற்றுதல்.

❖ மேலதிக பொறுப்புக்களை ஏற்கக்கூடியதான ஆற்றல்களை குடியியல் அமைப்புக்களுக்கு வழங்குதல்.

❖ உள்ளூர் அரசாங்கங்களின் வளர்ச்சியில் ஏனைய அமைச்சுக்கள் நிறுவனங்களுடைய உதவியைப் பெற்றுக்கொள்வதோடு அதற்கான உரிமையையும் அவர்களுக்கு வழங்குதல்.

இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது யாதெனில் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தையும் 13ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தச் சட்டத்தையும் 1999 மறுசீரமைப்பு ஆணைக்குழு அறிக்கையையும், 2007 உள்ளூராட்சி கொள்கைப் பிரகடனத்தையும் அதைத் தொடர்ந்து வந்த மறுசீரமைப்பு சுற்றறிக்கைகளையும் ஒருங்கிணைந்த வகையில் பார்க்கும் பொழுது 3ஆம் படி நிலை ஆளுகை அமைப்பை சுயாதீனமுள்ள உள்ளூராட்சி அரசாங்கங்களைக் கொண்ட ஒரு கட்டமைப்பாக மாற்றியமைக்க முடியும் என்ற கருத்திற்கே வரமுடிகின்றது. இத்தகைய ஓர் பாரிய வாய்ப்பினை நாம் பிற்போடத் தேவையில்லை. இவற்றின் அடிப்படையிலேயே இங்கு ஓர் இராட்சதன் உறங்கிக்கொண்டிருக்கிறான் என்று நாம் அடிக்கடி கூறி வந்துள்ளோம். இவ் விலக்குகள் நோக்கி உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு ஏற்கனவே பல சீர்திருத்த நடவடிக்கைகளை பாரிய அளவில் முன்னெடுத்து வருகின்றது.

இவையாவும் சட்ட ரீதியாக ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிலைமைகளாகும். இதனது நன்மைகளை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியாமைக்கான காரணங்கள் பல உள்ளன. சரியான அரசியல் தலைமைத்துவமின்மை, தந்திரோபாய ரீதியான செயல் முறைகளை வகுத்துக்கொடுப்பதற்கு ஆற்றலுள்ள தொழில்சார் திறமையுள்ளவர்களின் பற்றாக்குறை, உள்ளூராட்சி நிறுவனங்களினுள் மனிதவளப் பற்றாக்குறை மாற்றத்திற்கான வரவேற்பின்மை போன்ற பல தடைகள் உள்ளன. இவை பற்றி விரிவாக ஆராய்ந்து ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தி மாபெரும் இயக்கமொன்றினை உறுதியான தலைமைத்துவத்தின் கீழ் முன்னெடுத்துச் செல்வதன் மூலமே இதன் மூலமான நன்மைகள் மக்களைச் சென்றடையச் செய்ய முடியும். இதற்கான ஆரம்பமே இக்கருத்துப்பரிமாற்ற மாநாட்டின் நோக்கமாகும். இது உணவுக்காக பெரிய பூசணிக்காய் ஒன்றை தேடியலைந்த ஒருவன் தன்னுடைய காலடியிலிருந்த சத்து மிக்க கோழிமுட்டைகளைத் தவறவிட்ட கதை போல ஆகிவிடக்கூடாது. இந்த வாய்ப்புக்களைச் சரிவரப் புரிந்துகொண்டு அரசியல் தலைவர்கள், கல்விமான்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், பொது நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் எல்லோருமாகச் சேர்ந்து உறுதியான செயற்பாடொன்றை மேற்கொண்டால் உள்ளூர் விடயங்களில் ஆட்சி செய்வதற்கு சுயாதீனமான அரசாங்கங்களை உள்ளூர் மட்டத்தில் நிறுவிக்கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை.

ஒருவன் தன் துரதிர்ஷ்டத்தைப் பார்த்துச் சிரிப்பதற்கு அவனுக்கு பேரறிவு வேண்டும்.

~ இந்தியா

வலம்புரி

## கெந்தகப் பூமியில் விளம்பரத்தின் நினைவூட்டல்

யாழ்ப்பாணத்தில் தற்போது வங்கிகளின் வருகை அதிகரித்த வண்ணம் உள்ளன. இலங்கையில் யாழ்ப்பாணமே பொருளாதார முன்னேற்றமுடைய பிரதேசம் என்பதுபோல வங்கிகள் போட்டாபோட்டியில் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமிக்கின்றன.

வங்கிகளின் இந்த வருகையால் அவற்றின் சுருக்கப் பெயர்களையும், விரிவான பெயர்களையும் மனனம் செய்ய வேண்டிய தேவையுள்ளது.

மக்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, வங்கிகளின் வரவால் யாழ்ப்பாண மண் கவர்ச்சி காட்டுவதையிட்டு ஆறுதலடைவோம். அதனையே பிரம்மா எங்கள் தலையில் எழுதிவிட்டார். ஏற்று – சகித்து வாழ்வதே சிறப்பு.

ஆனாலும் ஒரு விடயத்தை இங்கு சுட்டுதல் வேண்டும். அதாவது யாழ்ப்பாணத்தில் அண்மையில் தனது கிளையை நிறுவிய வங்கி ஒன்று விளம்பரம் செய்திருந்தது:

அந்த விளம்பரத்தில் செத்தல் மிளகாய் பரந்து, விரிந்து, குவிந்து கிடக்கின்றது. அதன் மத்தியில் யாழ். பொது நூலகம். அந்த விளம்பரத்தைப் பார்த்தபோது வயிறு பற்றி எரிந்தது. இது செத்தல் மிளகாயின் காரத்தால் அல்ல. அந்த விளம்பரம் 1972 களில் இருந்த யாழ்ப்பாணத்தையும் வன்னி மண்ணையும் நினைவூட்டியதால் ஏற்பட்டதாகும்.

சிறிமாவே பண்டார நாயக்கவின் ஆட்சியில் விவசாயிகள் உயிர்ப்புப் பெற்ற காலம் அது. யாழ்ப்பாணத்திலும் வன்னிப் பெருநிலப்பரப்பிலும் செத்தல் மிளகாய் இப்படித்தான் குவிந்து கிடந்தன. செத்தல் மிளகாய் விற்றதனால் மண் வீடு கல் வீடாகியது.

இப்போ அந்தக் கல் வீடும் இல்லை. செத்தல் மிளகாயும் இல்லை. விளம்பரம் எடுத்தியம்பிய செத்தல் மிளகாய்க் காட்சியின் சொந்தக்காரர்கள் இப்போது முட்கம்பி வேலிக்குள் முடங்கிக் கிடக்கின்றனர்.

புதுமாத்தளனில் அவர்கள் ஒரு கிலோ செத்தல் மிளகாய்க்கு ஐயாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டி இருந்ததான செய்தியும் உண்டு. நிலைமை இதுவாக இருக்கும்போது வங்கியின் விளம்பரத்தில் காட்சி தந்த செத்தல் மிளகாய் எங்கள் இனத்தின் முன்னையை வரலாற்றை எடுத்தியம்ப வயிறு பற்றி எரிந்து கண்ணின் ஓரங்கள் நனைந்து கொண்டன.

என்ன செய்வது? பொன் விளைந்த பூமி கெந்தகப் பூமியாய் மாறிவிட்டது. உழுது விதைத்து வாழ்வளித்த விவசாயப் பெருமக்கள் எல்லாம் இழந்து மெலிந்த தோற்றமும் தாடியால் மறைந்த முகமுமாக...

இறைவா! இந்த விளம்பரம் எங்கள் மண்ணில் என்று நிஜமாகும்? அந்த நிஜத்தைத் தந்த எங்கள் உறவுகள் என்று விடுதலை பெறுவர்.


# இலங்கையில் மனித உரிமை மீறப்பட்டுள்ளமைக்கான உண்மையான அறிக்கைகள் எதுவுமில்லை

## அமைச்சர் ரோகித போகொல்லாகம

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளமைக்கான உண்மையான அறிக்கைகள் எதுவுமில்லை என வெளிவிவகார அமைச்சர் ரோஹித பொகொல்லாகம தெரிவித்துள்ளார். பல அமைப்புக்கள் பொறுப் பின்றி மனித உரிமைகள் மீறப்பட் டுள்ளதாக தகவல்களை வெளியிட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை மீறல்கள் இடம் பெற்று வருவதாக சில நாடுகள் போலி யான தகவல்களை வெளியிட்டு வரு வதாகவும் பின்னர் அந்த அறிக்கைகளை குறித்தநாடுகள்வாபஸ்பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



சிங்கப்பூரின் வெளிவிவகார அமைச்சர் ஜோர்ஜ் ஈவோவுடன் வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற சந்திப் பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது குறித்து கவனம் செலுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## புதுக்குடியிருப்புப் பகுதியில் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

பெருமளவு ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களை பாதுகாப்புப் பிரிவினர் வன்னிப் பிரதேசத்தில் நடத்திய தேடுதல்களின் போது மீட்டுள்ளனர் என பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

புதுக்குடியிருப்பு பகுதியில் நடத்திய தேடுதலில் ஆர்.பி.ஜி.ரக குண்டொன்றும் 75 ரவைகளும் ரீ-56ரக துப்பாக்கியொன்றும் மீட்கப்பட்டுள்ளதுடன் அக்கராயன்குளம் பகுதியில் மேற்கொண்ட தேடுதல்களில் 25 மிதி வெடிகளும் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா பகுதியில் நடத்திய தேடுதலில் 11 கிளைமோர் குண்டுகள் ,ரி-56 ரக துப்பாக்கிகள் மற்றும் வெடி பொருட்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன . புலனாய்வுப் பிரிவினர் இந்தத் தேடுதலை நடத்தியுள்ளனர்.

இதேவேளை திருகோணமலை மலையூற்று பகுதியில் கைக்குண்டொன்றுடன் ஒருவர் கைதாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## பிரபாகரன் மற்றும் பொட்டம்மானின் மரணச்சான்றிதழ்களை இந்தியா கோருகிறது

(கொழும்பு)

கொல்லப்பட்டதாக இலங்கை அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் அதன் புலனாய்வுப் பிரிவு தலைவர் பொட்டம்மான் ஆகியோரின் மரணச் சான்றிதழ்களை வழங்குமாறும் மீண்டும் இந்திய அரசாங்கம் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பான விசாரணைகளை முடிவுக்கு கொண்டு வர இந்தியா பிரபாகரன் மற்றும் பொட்டம்மானின் மரணச் சான்றிதழ்களை ஏற்கனவே கோரியிருந்தது. இந்த மரணச்சான்றிதழ்கள் இதுவரை வழங்கப் படாதால் இந்திய மீண்டும் அவற்றை கோரியுள்ளது.

ராஜீவ் காந்தியின் கொலையின் முக்கிய குற்றவாளிகளாக பிரபாகரன் மற்றும் பொட்டம்மான் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## எதிர்க்கட்சிகளின் பொதுக்கூட்டமைப்பில் இணையவுள்ள கட்சிகள் வியாழன்று கூடுகின்றன

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து அமைக்கவுள்ள பொதுக் கூட்டமைப்பில் ஆரம்பக் கட்டமாக இணைந்துகொள்ளவுள்ள கட்சிகள் நாளை மறு தினம் வியாழக்கிழமை கூட விருக்கின்றனர். அன்றைய தினம் கூட்டணியின் புரிந்துணர்வு உடன் படிக்கையில் கைச்சாத்திடவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெறும் இந்தச் சந்திப்பில் முதல் கட்டமாக எதிர்க்கட்சிகளின் பொதுக்கூட்டமைப்பில் இணைந்து கொள்ளவுள்ள கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.இந்த சந்திப்பின் போது கூட்டமைப்பின் சின்னம் மற்றும் கொள்கைப் பிரகடனம் குறித்து அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன் முக்கியமாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நிராகரிப்பதே கூட்டமைப்பின் முக்கிய நோக்கமாக இருக்கும் என ஐ.தே.க. தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ-6)

## நியூயோர்க்கிலிருந்து ஜெனீவா சென்றுள்ள அமைச்சர் சமரசிங்க, நவநீதம்பிள்ளையை சந்திப்பாரா?

(கொழும்பு)

அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க நேற்று முன் தினம் நியூயோர்க்கில் இருந்து ஜெனிவா பயணமாகியுள்ளார். ஜெனிவா செல்லும் அமைச்சர் அங்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதன் போது இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள், இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கான வசதிகள் மற்றும் மீள் குடியேற்ற வேலைத்திட்டம் போன்ற விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் அமைச்சர் சமரசிங்கவின் ஜெனிவா விஜயத்தின் போது ஐக்கியநாடுகளின் மனித உரிமைப்பேரவை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளையை சந்திப்பாரா? என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என மனித உரிமை மற்றும் இடர்முகாமைத்துவ அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை ஒன்றை நடத்தும் கோரிக்கையை இலங்கை உதாசீனம் செய்துவிட்டதாக அண்மையில் பிரஸ்ஸல்ஸில் ஐ.நா.மனித உரிமைபேரவை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை தெரிவித்திருந்தார்.

ஆனால் நவநீதம்பிள்ளை யின் குற்றச்சாட்டு ஆதாரமற்ற மற்றும் மூன்றாம் தரப்பு தகவல் களைக் கொண்டு தெரிவிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்தவிடயம் குறித்துப் பேச்சு நடத்த ஜெனிவா செல்லும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க நவநீதம் பிள்ளையை சந்திப்பாரா? என்பது தொடர்பில் உறுதியான தகவல்கள் கிடைக்க வில்லை.

இதேவேளை அமெரிக்காவுக்கு சென்றிருந்த அமைச்சர் சமரசிங்க ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் நாயகம் பான்கீமூன் மற்றும் மனிதாபிமான விடயங்களுக்கான ஐ.நாவின் ஆணையாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் ஆகியோரை சந்தித்து இலங்கையின் வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள அகதிமக்கள் தொடர்பில் பேச்சு நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்



முகமது நபியோ,புத்தரோ நல்லவராக வாழ்ந்தார் என்பதை நான் ஏன் பொருட்படுத்த வேண்டும்? அது என்னுடைய நல்ல இயல்பையோ கெட்ட இயல்பையோ மாற்றியமைக்கப் போகிறதா? நமது நன்மைக்காக ,நமது விருப்பத்திற்காக நாம் நல்லவர்களாக இருப்போம்.

அந்தக் காலத்தில் யாரோ ஒருவர் நல்லவராக இருந்தார் என்பதற்காக நாம் நல்லவராக இருக்கவேண்டியதில்லை.

# மாலைதீவு மந்திரிகள் புதுமை கடலுக்கு அடியில் ஆலோசனை

(மாலே)

மாலைதீவு அமைச்சரவைக் கூட்டம் கடலுக்கு அடியில் கடந்த செவ்வாய்க்கிழமை வெற்றிகரமாக நடந்தது. உலகம் வெப்பமயமாகி வருவதால் துருவப்பகுதியில் பனி மலைகள் உருகி கடல் மட்டம் உயர்ந்து வருகிறது.

இந்த நிலை நீடித்தால் வரும் 2100ஆம் ஆண்டில் மாலைதீவு கடலில் மூழ்கி விடும் என்று ஐ.நா. சுற்றுச்சுழல் அமைப்பு எச்சரித்திருந்தது.




ஏனெனில் கடல் மட்டத்தில் இருந்து 100 அடிக்கும் குறைவான உயரத்தில் உள்ளது. இத் தீவு. எனவே இந்தப் பயங்கரத்தை தடுக்க உலக நாடுகள் ஒத்துழைக்க வேண்டும் என்பதை வற்புறுத்துவதற்காக கடந்த செவ்வாய்க் கிழமை மாலைதீவு அமைச்சரவைக் கூட்டம் கடலுக்கு அடியில் நடந்தது.

தலைநகர் மாலேயில் இருந்து 35 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கிரிபுஷித் தீவில் 6 மீற்றர் ஆழத்தில் அதிபர் முகமது நஷித் (42) தலைமையில் கடலுக்குள் அமைச்சரவைக் கூட்டம் நடந்தது. அமைச்சர்கள் அனைவரும் கடலில் முத்தெடுக்கும் வீரர்களைப் போன்ற உடையுடன் இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். 45 நிமிடம் இவர்கள் கடலுக்கு அடியில் இருந்தனர். அமைச்சரவைக் கூட்டம் 25 நிமிடங்கள் நடந்தது. உலகம் வெப்ப மடைவதால் எங்கள் நாடு கடலில் மூழ்குவதில் இருந்து காப்பாற்ற உலகத் தலைவர்கள் முன் வரவேண்டும் என இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் இயற்றப் பட்டது.

அமைச்சர்கள் தங்கள் கையில் இருந்த வெள்ளைப் பலகையில் எழுதி தங்கள் கருத்தை தெரிவித்துக்கொண்டனர்.

கடலுக்கு அடியில் தங்கியிருப்பதற்காக இந்த அமைச்சர்கள் கடந்த 2 மாதங்களாக கடலில் மூழ்கும் பயிற்சி பெற்றனர். மாலைதீவு நூற்றுக்கும் அதிகமான தீவுகளை உள்ளடக்கியது.

இதில் 90 சத வீத தீவுகள் கடல் மட்டத்தில் இருந்து ஒரு மீற்றர் உயரத்தில் உள்ளவை. உலகிலேயே கடலுக்கு அடியில் நடந்த முதல் அமைச்சரவைக் கூட்டம் இது தான் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# நேபாள அரசியலில் குதிக்கிறார் நடிகை மனீஷா கொய்ராலா

(காத்மண்டு)



பிரபல இந்தி நடிகை மனீஷா கொய்ராலா நேபாள நாட்டைச் சேர்ந்தவர் .அவரது தாத்தா பி.பி.கொய்ராலா நேபாள நாட்டின் முதலாவது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் ஆவர்.

சமீபத்தில் காத்மாண்டுவில் உள்ள பி.பி.கொய்ராலாவின் நினைவிடத்துக்கு மனீஷா சென்றார். அங்கு 2 மணி நேரம் செலவிட்ட மனீஷா தனது நாட்டுக்கு சேவை செய்யும் பொறுப்பு தனக்கு வந்திருப்பதாக அங்கிருந்த புத்தகத்தில் எழுதினார்.

பிறகு நிருபர்களுக்கு பேட்டி அளித்த மனீஷா தனக்கு அரசியல் ஆர்வம் வந்திருப்பதாகவும் வருங்காலத்தில் தீவிர அரசியலில் குதித்து நேபாள நாட்டுக்கு சேவை செய்வேன் என்றும் கூறினார். மனீஷாவுடன் அவரது தாயார் சுஷ்மா தந்தை பிரகாஷ் கொய்ராலா ஆகியோரும் சென்றிருந்தனர்.

பிரகாஷ் கொய்ராலா கடந்த 2005ஆம் ஆண்டு அப்போதைய மன்னர் ஞானேந்திராவின் மந்திரிசபையில் மந்திரயாக இருந்தவர். ஆவார். மன்னரின் விசுவாசியான அவர் நேபாள காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டு விட்டார். இந்த சூழ்நிலையில் மனீஷா கொய்ராலாவின் அரசியல் பிரவேச அறிவிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (ஓ-6)

# ஈரானில் இடம்பெற்ற தற்கொலைக்குண்டு தாக்குதலில் உயரதிகாரிகள் பலர் பலி


ஜெனரல் நூர் அலி

தென் கிழக்கு ஈரானில் இடம்பெற்ற தற் கொலைத் குண்டுத்தாக்குதலொன்றில் ஈரா னிய புரட்சிகர பாதுகாப்பு படையைச் சேர்ந்த அநேக உயர்மட்ட கட்டளைத் தளபதிகள் பலி யாகியுள்ளனர்.

சிஸ்டான் பலுசிஸ்டான் மாகாணத்தில் இடம் பெற்ற இத் தாக்குதலில் குறைந்தது 29 பேர் பலி யானதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

பிராந்திய மலைப்பிரதேச தலைவர்களை சந்திப்பதற்காக பாதுகாப்பு படை அதிகாரிகள் சென்ற வேளையிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றுள் ளது.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தக் குழுவும் உரிமை கோரவில்லை.

மேற்படி குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற மாகாணத்தில் செல்வாக்குப் பெற்றுத் திகழும் ஜுன் டால்லாஹ் போராளி குழுவே இத்தாக்குதலுக்கு காரணமென குற்றஞ்சாட்டப்படுகிறது.

இத் தாக்குதலில் இறந்தவர்களில் புரட்சிகர காவல் படையின் மாகாண தலைமை கட்டளைத் தளபதி ரஜாப் அலி மொஹமட்ஸலடெஹ் மற்றும் காவற்படையின் பிரதி கட்டளைத் தளபதி ஜெனரல் நூர் அலி ஷுஷ்தாரி ஆகியோர் உள் ளடங்குகின்றனர்.

இந் நிலையில் பாராளுமன்ற கூட்டத்தில் உரையாற்றிய சபாநாயகர் அலி லாரிஜானி இந்தப் படுகொலைகளுக்கு எமது கண்டனத்தைக் தெரிவித்துக்கொள்கிறோம்.

இத் தாக்குதல் மூலம் சிஸ்டான் பலுசிஸ்தான் மாகாணத்தின் பாதுகாப்பை சீர்குலைப்பதே பயங்கரவாதிகளின் நோக்காக உள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறது என்று கூறினார். (ஓ-6)

# சிம்பாவேயில் தொடரும் ஒற்றுமையற்ற அரசியல் போக்கு



சிம்பாவேயில் இன்று நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்திற்கு அதிபர் ராபர்ட் முகாபே தலைமை ஏற்பார் என அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டத்தை புறக்கணிக்கப் போவதாக பிரதமர் மோர்கன் ஸ்வாங்கிராயின் கட்சியினர் கூறியுள்ள போதிலும் இது நடைபெறவுள்ளது.

பிரதமர் மோர்கன் ஸ்வாங்கிராயின் இந்த முடிபு ஏமாற்று வேலை என்றும் இதனால் எவ்வித மாற்றமும் வந்துவிடப்போவதில்லை எனவும் அதிபர் ராபர்ட் முகாபேயின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் சண்டே ஹெரால்ட் செய்தித் தாளிடம் பேசிய இவர் அதிபர் ராபர்ட் முகாபே நேரம் கிடைக்கும் போது அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண்பார் என்றும் தற்சமயம் மாணவர்கள் மற்றும் கால்பந்து விவ காரங்களை தீர்ப்பதில் அதிபர் கவனம் செலுத்தி வருகிறார் என்றும் குறிப்பிட்டார். (ஓ-6)

# மருமகள்களால் பாதிக்கப்பட்டோரால் மாமியார் பாதுகாப்பு சங்கம் உருவாக்கம்

(நகரி)

ஆந்திராவில் கடந்த சில ஆண்டுகளாக வரதட்சனை வழக்குகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. இந்த வழக்குகளில் கணவருக்கு அடுத்தபடியாக சிக்குவது மாமியார்கள் தான்.

இதனால் மருமகள்களிடம் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள ஐதராபாதத்தில் மாமியார்கள் பாதுகாப்புச் சங்கம் தொடங்கப் பட்டது.

இச் சங்கத்தின் அமைப்பாளர்களாக பத்மஜா, உமா ஆகியோர் உள்ளனர். அவர்கள் நிருப்ாகளிடம் கூறியவை,

சமீபகாலமாக மருமகள்களால் ஏராளமான மாமியார்கள் வீடுகளில் சித்ரவதை செய்யப்படுகிறார்கள். பல மாமியார்களுக்கு சரியான நேரத்திற்கு உணவு கூடக் கிடைப்பதில்லை.

மருமகள் பலர் மாமியாரைக் கடுமையாக சித்திரவதை செய்துவிட்டு பொலிஸில் வரதட்சணை கேட்டுகொடுமைப்படுத்துவதாக பொலிஸில் சிக்கவைத்து வருகிறார்கள்.

இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் முடிவு கட்டத்தான் நாங்கள்மாமியார் பாதுகாப்புச் சங்கத்தை தொடங்கிஉள்ளோம். தற்போது 30 பேர் உறுப்பினர்களாகி உள்ளனர். விரை வில் ஆயிரம் பேர்வரை உறுப்பினராக சேர்க்க முடிவு செய்துள்ளோம் என குறிப்பிட்டுள்ளனர்.(ஓ-6)

# இந்திய எல்லைக்குள் புகுந்த 5 இலங்கை மீனவர்கள் கைது

(சென்னை)

இந்தியக்கடல் எல்லைக்குள் அத்துமீறி புகுந்த, ஐந்து இலங்கை மீனவர்களை இந்திய கடலோரக் காவல்படையினர் சுற்றிவளைத்தனர். இந்தியக்கடல் எல்லைக்குள் அத்து மீறி புகும் இலங்கை மீனவர்கள் அடுத்தடுத்துக் கடலோரக் காவல் படையின் பிடியில் சிக்கி வருகின்றனர்.

ஆந்திரமாநிலம் அருகே, கடலோரக் காவல் படையினர் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கிருஷ்ணாம் பட்டி ணத்திலிருந்து 150 நாடிக்கல் மைல் தூரத்தில் சுற்றித் திரிந்த இலங்கை விசைப்படகை சுற்றி வளைத்தனர். அதிலிருந்த ஐந்துபேரையும் மடக்கிப் பிடித்து, சென்னை மாநகர பொலிஸா ரிடம் ஒப்படைத்தனர். மீன் பிடி துறைமுக பொலிஸார் வழக்கு பதிந்து , இந்திய எல்லைக்குள் அத்துமீறி புகுந்த ஐவரையும் நீதிமன்றில் கைது செய்து நீதி மன்றில் ஆஜர்ப்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டனர். (ஓ-6)

# அமெரிக்காவில் பங்குச் சந்தையில் 100 கோடி ரூபா பயங்கர மோசடி

## இலங்கையர் ஒருவர் உட்பட அறுவர் கைது

(நியூயோர்க்)

பங்குச் சந்தையில் உள்ளூர் வர்த்தகம் மூலம் 100 கோடி ரூபாய் அளவுக்கு மோசடி செய்த இந்தியர்கள் இருவர் உட்பட ஆறு பேர் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கும்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் வசிக்கும் இந்தியர்கள் அனில் குமார், ராஜிவ் கோயல் நியூயோர்க்கில் வசிக்கும் கோஊஸ்வரர் ராஜரத்தினம் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த இவர் கேலன் குரூப் நிறுவனங்களின் தலைவர் இவர்களும் நியூயோர்க்கை சேர்ந்த டெனில்லா சிசி ராபர்ட் மொபத் மார்க்குர் லாண்ட் ஆகிய மேலும் மூன்று பேரும் சேர்ந்து பங்குச் சந்தையில் உள்ள வர்த்தகர் மூலம் 100 கோடி ரூபாய் அளவுக்கு மோசடி செய்தது கண்டு பிடிக்கப்பட்டது. அமெரிக்காவில் நடந்த மிகப் பெரிய மோசடிகளில் இதுவும் ஒன்று. இதையடுத்து கடந்த வெள்ளியன்று கைது செய்யப் பட்டனர். இவர்கள் ஆறு பேர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கும். இவர்கள் ஆறு பேரும் பங்குச் சந்தையில் பணியாற்றும் சிலர் மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தகவல்களைப் பெற்று அதை மற்றவர்களுக்கு தெரிவித்துள்ளனர்.

அதனடிப்படை யில் வர்த்தகத்தை நடக்க வைத்து பெரும் மோசடி செய்துள்ளனர் என நியூயோர்க் அட்டர்னி ஜெனரல் பிரீத் பாரார கூறியுள்ளார். (ஓ-6)

# இந்தோனேசியாவில் அகதிகளுடன் பிரபல ஆட்கடத்தல்காரரும் உள்ளார்

## இந்தோனேசியா அதிகாரிகள் தெரிவிப்பு

இந்தோனேசியாவில் தடுத்து வைக்கப் பட்டுள்ள 260 இலங்கை அகதிகளுக்கிடையில் நன்கு பரீட்சியமான ஆட்கடத்தல்காரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்ரஹாம் லோஹெனாபெசி அல்லது கெப்டன் பிரேம் என அழைக்கப்படுகின்ற அவர் கடந்த 1999ஆம் ஆண்டு முதல் 1500 பேரை கடத்தியவர் என கூறப்படுகிறது.

அவருடன் மேலும் ஆறு மாலுமிகளும் இந்தோனேசியாவின் ஜாவாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கெப்டன் பிரேம் அவுஸ்திரெலியாவில் கைது செய்யப்பட்டால் 20 வருடங்கள் தடுத்து வைக்கப்படலாம் என்ற அச்சத்திலேயே தம்மை கைவிட்டு விட்டதாக இலங்கை அகதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பேரவையின் பிரதிநிதி ஒருவர் வரும் வரையில் தாம் கப்பலில் இருந்து வெளியேறப்போவதில்லை என அகதிகள் தெரிவித்துள்ளனர். (ஓ-6)








யாழ்.மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் யாழ்.வந்த அமைச்சர்கள், அரச அதிபர் க.கணேஷ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்களைப் படங்களில் காணலாம்.

## 15 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் தொடரில் சஜீவன் அதிரடி அரைச் சதம்; யாழ்.அணிக்கு ஹட்ரிக் வெற்றி

(திருகோணமலை)

சஜீவனின் அதிரடி அரைச்சதம் கைகொடுக்க யாழ்.மாவட்ட அணி 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மட்டக்களப்பு மாவட்ட அணியை வீழ்த்தியது.

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் லெமன் நிறுவனத்தின் அனுசரணையுடன் வடக்கு கிழக்கு மாகாண 15 வயதுக் குட்பட்ட மாவட்ட அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடர் திருகோணமலையில் நடைபெற்று வருகின்றது.

இதில் மன்னார்,திருகோணமலை மாவட்ட அணிகளுடனான போட்டியில் வெற்றி பெற்ற யாழ்.மாவட்ட அணி நேற்று மட்டக்களப்பு மாவட்ட அணியை சந்தித்தது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மட்டக்களப்பு மாவட்ட அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மாவட்ட அணி சஜீவனின் அதிரடி அரைச்சதத்தின் மூலம் 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 214 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சஜீவன் ஆட்டமிழக்காமல் 30 பந்துகளில்(6 பவுண்டரிகள், 4சிக்ஸர்கள் உட்பட) 54 ஓட்டங்களையும், ஜஸ்மிலன் 25 ஓட்டங்களையும், ஆதித்தன், கஜேந்திரன் ஆகியோர் தலா 18 ஓட்டங்களையும்,மதுஷன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அம்ஜாட் 31 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு மாவட்ட அணி இறுதிவரை போராடி 49.5 ஓவர்களில் 204 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையு மிழந்து 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியுற்றது.

இதில் அனோஜன் 54 ஓட்டங்களையும், ஹமிற்றல் 45 ஓட்டங்களையும்,சுஸ்கான் 29,புருஷோத் 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜஸ்மிலன்,ஜனந்தன்,கஜேந்திரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் அஜித்,நிருபன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் யாழ்.மாவட்ட அணி தொடரில் தான் விளையாடிய 3 போட்டிகளிலும் வெற்றிபெற்று அசத்தியது.

இந்நிலையில் யாழ்.மாவட்ட அணி 4 ஆவதும் இறுதியுமான போட்டியில் நாளை வவுனியா மாவட்ட அணியைச் சந்திக்கின்றது. (5)

## ருபெல்லா தடுப்பூசி தரம் குறைவானது

(கொழும்பு)

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட இந்தியத் தயாரிப்பான ருபெல்லா தடுப்பூசி மருந்து இந்தியாவிலேயே பயன்படுத்தாத தரக்குறைவானதென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரேணுகா ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வகையான தரக்குறைவான மருந்துகளைப் பாவிப்பதால் ஏற்படும் பாதிப்புக்களிற்கு சுகாதார அமைச்சே பொறுப்புக் கூற வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.(சு-5)

## சர்வதேச அழுத்தங்களுக்குள் சிக்குண்டுள்ள இலங்கை அரசு

### இந்திய நாளிதழ் தெரிவிப்பு

(புதுடில்லி)

பாரிய சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில் இலங்கை அரசு சிக்குண்டிருப்பதாக இந்திய நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கில் விடுதலைப்புலிகளால் புதைத்து வைத்தாகக் கூறப்படும் நிலக் கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளில் இலங்கை இராணுவம் மற்றும் இந்தியப் படை என்பன ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களை துரிதமாக மீளக்குடியமர்த்துமாறு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அமெரிக்கா என்பன பல்வேறு அழுத்தங்களை முன்வைக்கின்றன.

இதற்கிடையில் மீளக்குடியேற்ற நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டாத நிலையில் இலங்கைக்கான வர்த்தக வரிச் சலுகைகளை இல்லாது செய்வதற்கான நடவடிக்கைகளைப் பிரித்தானியா மேற்கொள்ளவுள்ளது.

இதேவேளை இலங்கைக்கு நான்கு நாள்கள் விஜயம் மேற்கொண்டிருந்த தமிழக ஆளும் கூட்டணிக் கட்சி உறுப்பினர்கள் அசாதாரணமான அமைதியைக் கடைப்பிடித்து விட்டு தற்போது நீர், உணவு மற்றும் பாலுக்கான தட்டுப்பாடு முகாம்களில் நிலவுவதாகத் தெரிவித்து வருகின்றனர்.

எது எவ்வாறாயினும் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளுக்காகவே இன்னும் மீள்குடியேற்றம் செய்யாதிருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்து வருகின்றார்.

பொதுமக்கள் பாரிய பொருளாதார வருவாய் பெறும் நிலங்களாகப் பயன்படுத்தப்பட்ட இடங்கள் அனைத்திலும் நிலக் கண்ணி வெடிகள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்தார்.

எனினும் இதனை அனைவரும் ஏற்றுக் கொள்ளவோ நம்பவோ இல்லை. இலங்கை வந்திருந்த இந்திய நாடாளுமன்றக் குழு மீள்குடியேற்றத் தாமதங்களுக்கு நிலக் கண்ணி வெடிகள் தொடர்பில் அரசாங்கம் காட்டிய காரணங்களுக்கு மன்னிப்பு வழங்கி சென்றுள்ளதாக அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகள் மன்னார் மற்றும் வவுனியா பிரதேசங்களில் உள்ள 32 கிராமங்களில் மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தளமாகக் காணப்பட்ட கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இந்த நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என அந் தச் செய்தித் தாள் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்திய அமைதி காக்கும் படையினர் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளால் வைக்கப்பட்ட நிலக் கண்ணிவெடிகள் தொடர்பில் அடையாளங்கள் காணப்பட்டாலும் இலங்கை இராணுவத்தினரால் புதைக்கப்பட்டுள்ள வெடிகளுக்கான வரைபடங்கள் எதுவும் இல்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் நிலக் கண்ணிவெடி அகற்றும் பணிகளும் மீள்குடியேற்றங்களும் பாரிய சிக்கல் நிலையை எதிர்நோக்கியிருப்பதாக அந்த நாளிதழ் சுட்டிக்காட்டியுள்ளது.(சு-5)

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில்...

அமரவீர, அமைச்சர் றோகித அனுரகுணவர்த்தன, அமைச்சர் லசந்தா அழகியவதன, அமைச்சர் ஜெயரட்ண ஹேரத் ஆகியோருடன் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.அரச அதிபர் க.கணேஷ் மற்றும் பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்களும் கலந்து கொண்டனர்.

இம் மாநாடு தொடர்பில் மின்சக்தி அமைச்சர் மகிந்தாணந்த அளுத்கமகே வலம்புரிக்குத் தெரிவித்ததாவது;

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 35 ஆயிரம் பேர் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதில் 17 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இதுவரை யாழ்.மாவட்டத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இம் மக்களுக்குப் பல்வேறு உதவித் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதனையடுத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசேட பணிப்பில் 11 அமைச்சர்கள் யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக உட்கட்டமைப்பு, அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ளனர்.

இம் அமைச்சர்கள் யாழ்.மாவட்டத்தில் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு அமைவாகப் பணிகளை முன்னெடுப்பர். இது தொடர்பில் ஆராய்வதற்காகவே நேற்று நான் உட்பட 8 அமைச்சர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தோம்.

இதற்கமைய சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் நேற்றுக் காலை யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் ஒவ்வொரு அமைச்சருக்கும் பிரதேச செயலக ரீதியான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதில் யாழ்ப்பாணம், மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவுகளில் நானும், நல்லூர் பிரதேச செயலக பிரிவில் அமைச்சர் மகிந்த அமரவீரவும், நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில் அமைச்சர் பிரேமலால் ஜெயசேகரவும், வேலணை பிரதேச செயலக பிரிவு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகியவற்றில் அமைச்சர் குஷைன் பைலாவும்,

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, சங்கானை பிரதேச செயலர் பிரிவு ஆகியவற்றில் அமைச்சர் வடிவேல் சுரேஸும் சண்டிலிப்பாய் செயலக பிரிவில் அமைச்சர் றோகித அனுர குணவர்த்தனவும் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் லசந்த அழகியவதனவும்

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் துமிந்த திஸாநாயக்கவும் உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுகளில் அமைச்சர் ஜெயரட்ண ஹேரத்தும் கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் அமைச்சர் ஜெயகத் புஷ்ப குமாரவும்

கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு அமைச்சர்களும் வார இறுதி நாள்களில் யாழ்ப்பாணத்துக்கு வந்து தமக்குப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ள பிரதேச செயலக பிரிவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைகளுக்கமைவாக வேலைத் திட்டங்களை முன்னெடுப்பர்.

இதில் குறிப்பாக தற்போது வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து மீள்குடியமர்த்தப்படும் 35 ஆயிரம் பேருக்கும் உரிய அடிப்படை உட்கட்டுமானப் பணிகளைச் செய்து கொடுப்பதில் கூடிய கவனத்தை ஒவ்வொரு அமைச்சர்களும் எடுப்பர்.

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான உணவுப் பொருள் விநியோகம், சுகாதாரம், கல்வி சீராக வழங்கப்படல், வீடு இல்லாதவர்களுக்கு உடனடியாக தற்காலிக வீடு அமைத் துக் கொடுத்தல் போன்ற வேலைத் திட்டங்களைப் பிரதானமாகக் கொண்டு செயற்படுவர்.

அதற்கு மேலாகக் குறித்த பிரதேச செயலக பிரிவில் மின்சாரம், நீர் உட்பட உட்கட்டமைப்பு வசதிகளைச் சீராக வழங்குதல், புனரமைக்கப்படாத வீதிகளைத் திருத்துதல் உட்பட மக்களுக்குத் தேவையானவற்றை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பர் என்றார்.

இதேவேளை குறித்த மாநாட்டில் அமைச்சர்கள் குழுவுக்கு யாழ்.அரச அதிபர் க.கணேஷ் யாழ்ப்பாண நிலைமைகள் தொடர்பிலும் மீள்குடியமர்த்தப்படும் குடும்பங்களின் தேவைகள் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினார். (சு-5)

## ஜி.எஸ்.பி+ வரிச் சலுகையை...

மனித உரிமைமீறல் செயற்பாடுகள் காரணமாக ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை பெறுவதற்கான தகுதியை இலங்கை இழந்துவிட்டதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஆணையம் இலங்கை அரசு ஐரோப்பிய ஒன்றியத்துடன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள இறக்குமதி தீர்வை யிலிருந்து சலுகைகளை பெறும் ஜி.எஸ்.பி. பிளஸ் திட்டத்தின் கீழ் தொடர்ந்து சலுகைகளைப் பெற தகுதி பெற்றிருக்கிறதா என்பதை ஆராய நியமித்த விசாரணைக்குழு தனது விசாரணையை பூர்த்திசெய்து நேற்று தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

இந்த அறிக்கையில் இலங்கை அரசு ஜி.எஸ்.பி. பிளஸ் திட்டத்தின்கீழ் அளித்த உறுதிப்பாடுகளை மீறியுள்ளதாகவும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச உடன்பாடு, சித்திரவதைக்கு எதிரான உடன்பாடு குழந்தைகளின் உரிமைகளிற்கான உடன்பாடு ஆகிய ஐ.நாவின் மூன்று உடன்பாடுகள் தொடர்பில் இலங்கையின் செயற்பாடுகளில் குறைகள் காணப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை அடுத்து இலங்கை க்கு ஜி.எஸ்.பி.பிளஸ் திட்டத்தின் கீழ் தொடர் ந்து வர்த்தக சலுகைகளை வழங்குவதா அல்லது இந்தத்திட்டத்திலிருந்து இலங்கை பயன் பெறுவதை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதா என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றிய உறுப்புநாடுகளுடன் ஐரோப்பிய ஆணையம் ஆராயும் என்று ஐரோப்பிய ஆணையத்தின் வர்த்தகத்துறைப் பேச்சாளர் லூட்ஸ்கூல்டர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பி.பி.சிக்குக் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐரோப்பிய ஒன்றியம் தற்போது என்ன நடவடிக்கை எடுக்கும் என்று என்னால் முன் கூட்டியே கூறமுடியாது ஏனென்றால் எந்த முடிவும் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடு களால் எடுக்கப்பட வேண்டும். ஆனால் இந்த கணிப்பு அறிக்கையின் விளைவாக வந்த ஆதாரம் மிகவும் தெளிவாக இருக்கிறது.

அதாவது இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் நிறைவேற்றப் படவில்லை என்பதுதான் அது. எனவே வர்த்தக சலுகைகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்க ஒரு ஆலோசனையை நாங்கள் தயாரித்து சமர்ப்பித்தோம் என்று அவர் தெரிவித்தார். இலங்கை இந்த திட்டத்தின் கீழ் ஐரோப் பாவிற்கு தயாரிக்கப்பட்ட ஆயத்த உடைகள் மீன் போன்றவற்றை சலுகை அடிப்படையில் ஏற்றுமதி செய்கிறது.

இதன் மூலம் கடந்த ஆண்டு மட்டும் சுமார் 1.24 பில்லியன் யூரோக்கள் பெறுமதி யான பொருட்கள் இலங்கையிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

இதன்மீது இறக்குமதித் தீர்வை விதித்திருந்தால் அதன் மூலமாக 78 மில்லியன் யூரோக்கள் ஐரோப்பியஒன்றியத்திற்கு கிடைத்திருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

ஐரோப்பிய யூனியனே 2008இல் இலங்கையின் பாரியளவிலான ஏற்றுமதி பிராந்தியமாக இருந்தது. இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் அதிகளவான 36 வீதம் ஐரோப்பிய யூனியனுக்கே மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவதாக அமெரிக்கா இருந்தது. அது 24 வீதமாக இருந்தது. ஐரோப்பிய யூனியன் சந்தையால் ஆடைக்கைத் தொழில் ஏற்றுமதி மூலம் இலங்கை 3.47 பில்லியன் டொலரைப் பெற்றுக்கொண்டது.

இது அந்நியச் செலாவணி ஈட்டலின் பெரும் சந்தையாக இருந்துள்ளது. அதற்கடுத்து பணவருவாய் 3பில்லியன் டொலர்களாக இருந்தது. தேயிலை ஏற்றுமதி மூலமான அந்நியச் செலாவணி வருமானம் 1.2 பில் லியன் டொலர்களாக இருந்துள்ளது.

திங்களன்று இந்த அறிக்கை குறித்து விவாதிக்கும் ஆணைக்குழு நவம்பர் இறுதியில் இலங்கைக்கான ஜி.எஸ்.பி.பிளஸ்ஐ தற்காலி கமாக நிறுத்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகளு க்கு அறிவுறுத்தும். இந்த முடிபு அடுத்த வருடம் ஜூன் வரை அமுலில் இருக்கும் எனவும் கூறப்படுகிறது. (ச-5,14)


கேட்ட உடன்
கைகளில் பணம்



கொமர்ஷல் வங்கியின்
தங்க நகை அடகு சேவை

பவுனுக்கு ரூபா.22,000/- வரை
வட்டி வருடத்திற்கு 18% மட்டுமே

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதிக் கிளையில்
ஒக்டோபர் 20ம் திகதியிலிருந்து.....

COMMERCIAL BANK

(C-3522)


## மக்கள் மீள்...

மாணவர்களின் புதைக்கப்பட்டிருந்த திறமைகள், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கையினால் தற்போது வெளிக்கொணரப்படுகிறது. 30 வருடங்களுக்கு முன்பு நான் குருநகர்ப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றினேன்.

அக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் கடமையாற்ற வேண்டும் என்ற விருப்பில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு இங்கு இடம்மாற்றும் பெற்றுவருவர். அவ்வாறு வடக்கும் தெற்கும் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒற்றுமையாக புரிந்துணர்வுடன் இருந்தனர்.

1975ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் இலக்கிய விழாவில் எனது தந்தை அமைச்சர் தென்னக்கோன் தமிழில் உரையாற்றினார். இவ்வாறு தமிழ், சிங்கள மக்களிடையே நல்லதொரு நல்லுறவு காணப்பட்டது. அவ்வாறான ஒரு காலம் மீண்டும் மலர்ந்துள்ளது. வவுனியா நலன்புரி முகாம்களில் உள்ள மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டதும் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு வடக்கிலும் ஜனநாயகம் ஏற்படுத்தப்படும்.

தமிழ் மக்களுக்கு நல்லதொரு காலம் மலர்ந்துள்ளது. யாழ். மக்களின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எல்லா அமைச்சர்களுடன் நட்பு ரீதியாகப் பழகி இம்மாவட்டத்தின் அபிவிருத்திக்கு பாடுபட்டு வருகிறார் என அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார். (ச-5)

## பண்ணை...

எடுத்துரைத்ததுடன் வடக்கின் வசந்த வேலைத் திட்டத்தின் கீழ் இந்த வீதியை துரித அபிவிருத்தி செய்ய வேண்டியதன் தேவையையும் எடுத்துரைத்தார். தீவகத்திற்குச் செல்லும் பண்ணைப் பாலப்பகுதியைப் பார்வையிட்ட அமைச்சர்கள் குழுவினர் அந்த வீதியைத் துரிதகதியில் திருத்து வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற் கொள் வதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை அல்லைப்பிட்டி பராசக்தி வித் தியாலயத்திற்குச் சென்ற அமைச்சர்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட நிலையில் அங்கு கல்விகற்று வரும் மாணவர்களைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடினர். (ச-5)

## பங்குச்சந்தை...

சந்தித்துள்ளது. இது தொடர்பாக இலங்கை பங்குவர்த்த கரான மோகன்ராஜ் தங்கராஜா தெரிவித்ததாவது,

பங்குச்சந்தை இன்று (நேற்று) ஒன்றரை சதவீ தமாக பின்னடைந்தது. ஜோன்கீல்ஸ், ஸ்ரேடிங், கொமர் சல்வங்கி, அபிவிருத்தி வங்கி போன்றவற்றில் சரிவு நிலவியது.

இந்தக் கம் பனிகளில் அவரது முதலீடுகள் இருந்ததே இதற்குக் காரணம். சில கம்பெனிகளில் பெருமள விலான முதலீடுகளை வைத்திருந்தார்.

அவரிடமிருந்து பங்குகளை விற்பனை செய்வதுதொடர்பாக தடை எதுவும் விதிக்கப் பட வில்லை. யாரும் அதை வாங்கவும் மாட்டார்கள் இந்நிலைமை தொடர்ந்து பங்கு வர்த்தகத்தில் சரிவை ஏற்படுத்தும் என நான் நினைக்கவில்லை இலங்கையைப் பொறுத்தவரை அவ ரது செயற்பாடுகள் குறைப்பதாக தெரியவில்லை என்று அவர் தெரிவித்தார். (ச-14)

## கிளிநொச்சி...

மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முழுமூச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் யாழ். குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றி மக்களை மீள்குடியமர்த்தல் தாமதமடையலாம். எனவே அவர்களை உறவினர்களின் வீடுகளில் தங்கவைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டதும் அங்கு பயன்படுத்தப்பட்ட இயந்திரங்கள் மற்றும் ஆளணியினரைப் பயன்படுத்தி யாழ். மாவட்டத்திலும் கண்ணிவெடி அகற்றலை மேற்கொள்ள முடியும் என அவர் கூறினார். (ச-5)

## மீள்குடியமர்வு தொடர்பில்...

இந்திய நாடாளுமன்றக் குழுவின் விஜயத்தின் பின்னர் இடம்பெயர்ந் தவர்களின் குடியேற்றத்திற்காக 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்க மத்திய அரசாங்கம் முன்வந்துள்ளமையை அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிதி மீள்குடியேற்ற நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி பிரவேசித்துக் கைது செய்யப்படும் இந்திய மீனவர்கள் பிரச்சினை குறித்தும் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் விரைவான ஒரு இணக்கப்பாட்டுக்கு வரும் பொருட்டு பரஸ்பரம் புரிந்துணர்வினை ஏற்படுத்தும் வகையிலான உறவுகளை வலுப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## கட்டுநாயக்க விமான நிலை...

அன்றைய நாள் இரவு 10.00 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய அவ்விளைஞர்களை இலங்கைக் பொலிஸாருடன் இயங்கும் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

அதேபோன்று கடந்த 16ஆம் திகதி இலங்கையிலிருந்து பிரித்தானியா செல்ல முயன்ற தமிழ் மாணவர்கள் 18பேர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டனர்.

பிரித்தானிய மாணவர் விசாபெற்று இவர்கள் அங்கு செல்ல முற்பட்ட வேளையி லேயே கைதாகி விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வெளிநாடுகளுக்கு பயணிக்கும் தமிழ்மக்களைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் ஏராளமான புலனாய்வுப் பிரிவினரும் துணை இராணுவக் குழுவினரும் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் கடந்த நான்கு மாதங்களாக இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## பாதுகாப்பு செயலர்...

பசில் ராஜபக்ஷ இன்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றிய தன் பின்னர் பதவியை ராஜினாமா செய்து கொள்ள வுள்ளார். இதற்கான முன்னறிவித்தல் கடிதம் சபாநாயகர் வி.ஜே.மு.லொக்கு பண்டாரவிடம் நேற்றுக் காலை பசில் ராஜபக்ஷவினால் கையளிக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து கொள்ளவிருப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பசில் ராஜபக்ஷவும் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடவிருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அதேவேளை பொதுத் தேர்தலை அல்லது ஜனாதிபதித் தேர்தலையா முதலில் நடத்துவது என்ற அறிவிப்பு அடுத்த மாதம் 15ஆம் திகதி நடைபெறவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## கம்பஹாவில்...

பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் அனைவரும் மலை யக இளை ஞர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இதே வேளை கைதான இளைஞர் கள் பல சரக்குக் கடைகளிலும் வர்த்தக நிலையங்களிலும் பணிபுரிவர்கள் என உறவினர்கள் கூறுகின்றனர். (ச-5)


# தொழிற் பயிற்சிகள்

எங்கள் நிறுவனத்தில் தொழிற்கல்விகளை பயில்வதன் மூலம் உங்கள் எதிர்காலத்தை வளமாக்குங்கள்

☆ ரேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் ரிப்பியறிங்
★ றேடியோ ★ வீடியோ டெக் ★ DVD Player
★ ரெலிவிசன் ★ CD Player ★ Amplifier காலம்:-10மாதம்

☆ Mobile Phone Repairing
Hard ware — Hard ware Repairing
Soft ware — Phone Lock காலம்:-3மாதம்

☆ ஏயார் கொண்டிசனிங்
குளிர்சாதனங்களும் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்:-6மாதம்

☆ எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங் காலம்:-6மாதம்

☆ Diploma in computer Hard ware Engineering காலம்:-3மாதம்

குறிப்பு: சகல பயிற்சிகளுக்கும் 6 மாதம் முதல் 10 மாதம் வரை முழு நேர செய்முறைப் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

விபரங்களிற்கு, பயிற்சிகள் ஆரம்பம் :23/10/2009

JAFFNA TECHNICAL INSTITUTE
No.45, மணிக்கூட்டு வீதி(பெருமாள் கோவில் முன் வீதி),
யாழ்ப்பாணம். T.P:- 021 222 6434, 0718561654

(C-3578)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.